15-2-55

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAR 1955
MADRAS

425

1425
1-55

-2-

செய்திகள்

கிரிக்கெட்

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் அடிலெய்ட் (ஆஸ்திரேலியா) என்ற ஊரில் நான்காவது டெஸ்ட் மாட்ச் நடைபெற்றது. மொத்தம் ஐந்து டெஸ்ட் மாட்சுகள் விளையாடுவதாக முடிவு. இத்துடன் முடிவான நாலு டெஸ்டுகளில் மூன்றில் இங்கிலாந்தே வெற்றிபெற்றுவிட்டது. ஆனகையால் இனி ஒரு டெஸ்டில் அது தோற்றுல்கூட பரவாயில்லை. இந்த டெஸ்ட் ஸீரீஸில் இங்கிலாந்தே ரப்பரைத் தங்க வைத்துக்கொண்டுவிட்டது. ஆஸ்திரேலியா இரண்டு இன்னிங்ஸ்களிலும் முறையே 323, 111 ரன்களும் இங்கிலாந்து 341, 97 (5 விக்கெட்டுகள்) ரன்களும் எடுத்திருந்தன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே லாகூரில் நடைபெற்ற மூன்ருவது டெஸ்ட் மாட்சு முதல் இரண்டு டெஸ்டுகளைப் போலவே 'டிரா'வாக முடிந்துவிட்டது. பாகிஸ்தான்: 328, 136 (5 விக்கெட்டுகள்.) இந்தியா: 251, 74 (2 விக்கெட்டுகள்.)

கால் பந்து கோஷ்டி

ரஷ்யாவிலிருந்து ஒரு கால் பந்து கோஷ்டி இப்போது இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறது. இந்தக் கோஷ்டியார் சென்னைக் கோஷ்டியுடனும் அகில இந்தியக் கோஷ்டியுடனும் சென்னையில் பிப்ரவரி 11, 12 தேதிகளில் விளையாடுகிருர்கள்.

மூன்ரும் பரிசு பெற்ற முஸ்லிம் மாணவி

ஸ்ரீ காசி மடம் தம்பிரான் அவர்கள் ஏற்பாட்டின்படி மதுரை நகரில் கந்தர் கலிவெண்பா பரிசுப் போட்டி நடைபெற்றது. 4, 5, 6-ஆம் படிவ மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். 16 மாணவிகளும் போட்டியிட்டனர். இவர்களில் மூன்ருவது பரிசு பெற்றவள் ஒரு முஸ்லிம் மாணவி என்பது போற்றுதற்குரியது. இந்த மாணவிக்கு ரூ. 70 உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

ரஷ்யாவின் புதிய பிரதமர்

ஸோவியத் ரஷ்யாவில் ஸ்டாலினுக்கு அடுத்தபடியாக மாலெங்காவ் என்பவர் புதிய பிரதமராக வந்தார். இவர் இந்தப் பதவிக்கு வந்து ஒரு வருஷம் பத்து மாதமே ஆகிறது. இவர் தம் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். புல்கானின் என்ற ராணுவ மந்திரி இப்போது ரஷ்யப் பிரதமராகப் பதவி ஏற்றிருக்கிருர்.

வள்ளியின் செல்வன்

தமிழ் நாடெங்கும் 'வள்ளியின் செல்வன்' என்ற திரைப் படத்தை ஜெமினியார் இந்த மாதம் வெளியிடுகிருர்கள். அன்பும் தியாகமும் நிறைந்த இந்தக் கதையில் இரண்டு குழந்தைகளும் வருகிருர்கள். அவர்கள் இருவரும் அபாரமாக நடித்து, படம் பார்ப்பவர்களையெல்லாம் பரவசப்படுத்திவிடுகிருர்கள். ரெயில் வண்டி விளையாட்டு ஒன்று வருகிறது. இதைப் பார்த்துவிட்டு வந்து நீங்கள் எல்லாரும் 'ஜிக்கு, ஜிக்கு' என்று விளையாடாமல் இருக்கவே முடியாது. அவ்வளவு ஜோரான விளையாட்டு இது.

பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 4

15 - 2 - '55

குழந்தைகளே! பக்கம்	2
லீடர் மணி ..	3
ஆமையாரே ..	8
நமது தமிழ்த் தாத்தா ..	9
டிங்கினுனே ..	10
உத்தமபுத்திரன் ..	13
பிசாசு ..	17
கும்பகர்ணன் ..	20
கேளுங்கள், சொல்கிறேன்	24
கழக அங்கத்தினர்கள் ..	27
கவியரங்கம் ..	29
பாரஸீக ரோஜா ..	30
எங்கள் பகுதி ..	32
புதிர்க் கேள்விகள் ..	33
போட்டோ க்விஸ் ..	34
சந்திரகிரிக்கோட்டை ..	36

•செய்திகள் - 2-ஆவது அட்டை
கிளைக்கழகம் 3-ஆவது அட்டை

அட்டைப்படம்: எஸ். ஸ்ரீதரன்

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

அருமையான சம்பவம்

இருளைக் கிழித்துக்கொண்டு ஓடியது கல்கத்தா மெயில். அதில் மூன்றும் வகுப்புப் பெட்டி யொன்றில் சாமான்கள் வைக்குமிடத்தில் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தான் ராகவன்.

கல்கத்தா நகரத்தைப் 'பார்க்க வேண்டும்' என்ற ஆவலினால், கோடை விடுமுறையில் மாமா வோடு கல்கத்தாவுக்குப் போகிறான்.

அவன் தொட்டிலிலிருந்து புரண்டான். மறுகணம் 'தடா' லென்று கீழே விழுந்த அவன், "ஐயோ!" என்று கூச்சலிட்டான். அவனுக்கு மண்டையில் பலத்த அடி. நெற்றியில் ஒரு பக்கம் ஒரு மாங்காயளவுக்கு வீங்கிப் புடைத்திருந்தது. அவன் எழுப்பிய கூச்சலைக் கேட்டுப் பெட்டியிலிருந்த அத்தனைபேரும் திடுக்கிட்டு விழித்துக்கொண்டனர்.

ஒரு மீசைக்கார ஆசாமி அவனைத் தூக்கி நிறுத்தி, "எங்கே தம்பி அடி?" என்று அநுதாபமாகக் கேட்டார். ராகவன் தலை சுற்ற, பெட்டியை ஒரு தரம் சுற்றுமுற்றும் பார்த்தான். என்ன விந்தை! மாமாவைக் காணோம்! இது ராகவனுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. "மாமா, மாமா" என்று தொண்டை கிழியக் கத்தினன். வலி தாளாமல் இப்படிக் கத்துவதாகப் பலர் நினைத்தார்கள். ஆனால் அந்த மீசைக்காரப் பேர்வழிமட்டும், "என்ன தம்பி, உன் மாமா யார்?" என்று கேட்டார்.

"இங்கே படுத்திருந்தாரே!"

"ஒரு வழுக்கை விழுந்த ஆசாமி தானே?"

"ஆமாம்."

"அவர்தான் முன் ஸ்டேஷனில் இறங்கிப் போய்விட்டாரே!"

இதைக் கேட்டதும் "மாமா!" என்று அலறியபடி மூர்ச்சித்து விட்டான் ராகவன். அந்தச் சமயத்தில், "இங்கே என்ன அமர்க்களம்?" என்று கேட்டுக் கொண்டே 'பாத்ரூமி'லிருந்து வந்தார், சாட்சாத் அவனுடைய மாமா!

—'ஓங்கல்', கள்ளிக்குளம்.

MADRAS

குழந்தைகளே!

இந்த இதழில் 'நமது தமிழ்த் தாத்தா' என்ற ஒரு குறிப்பும், அவர் எழுதிய சுவைமிக்க வரலாறு ஒன்றும் வெளியாகியிருக்கின்றன. இரண்டையும் நீங்கள் படித்து மகிழ்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தத் தமிழ்த் தாத்தா எண்பத்தேழு வருஷகாலம் பெருவாழ்வு வாழ்ந்தார். கண்ணை மூடுகிறவரையில் அவர் விட்ட மூச்சு தமிழ் மூச்சுத்தான். தமிழுக்கு அவர் ஆற்றிய பணியைப் பாராட்டி, சென்னைச் சர்வகலாசாலையார் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கினார்கள். அரசாங்கம் 'மகா மகோபாத்தியாயா' என்ற பட்டம் வழங்கியது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் 'தாக்ஷிணாத்ய கலாநிதி' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டினார்கள். இவ்வளவுக்கும் அவர் இளம் பிராயம் முதலே தமிழ்ப் பக்தியும் சிவபக்தியும் நிறைந்து விளங்கியதே காரணம். டாக்டர் தாத்தா சிறுவர்களிடத்தில் பேரன்பு கொண்டு விளங்கினார். சின்னக் குழந்தையாக இருப்பவர்களைக்கூட அவர் மிக மரியாதையாகவே அழைப்பார். அவரிடத்தில் கல்வி பயின்ற மாணாக்கர்களுக்குக் கணக்கு வழக்கேயில்லை. தமக்கு வித்தை கற்பித்த ஆசிரியர்களிடத்திலே மாருத பக்தியும் தம்மிடம் பயின்ற மாணவர்களிடத்திலே குன்ருத அன்பும் மிகுந்தவர் இப்பெருந்தகை. தமிழ்ப் பண்பே உருவாக விளங்கிய இந்தத் தாத்தாவின் நூற்றுூராவது பிறந்த நாள் இந்த மாதம் 19-ஆம் தேதி வருகிறது. சென்னையிலும் வெளியூர்களிலும் இந்த நினைவு நாளைக் கொண்டாடுகிருர்கள். அவருடைய நினைவு மலராக இந்தக் கண்ணன் இதழ் விளங்குகிறது.

'அதிருஷ்டக் குழந்தைகள்' யார் யார் என்று தெரிந்துகொள்ள நீங்கள் ஆவலோடு இருக்கிறீர்கள். இந்த இதழிலேயே அவர்களுடைய பெயர்களை வெளியிட முயன்றேன். எல்லாக் குழந்தைகளுடைய பெயர்களையும் சீட்டில் எழுதி முடிவதற்குள் கண்ணன் இதழ் வெளிவரவேண்டிய நாள் வந்துவிட்டது. அதனுல் அடுத்த இதழில்தான் வெளியிடும்படி இருக்கிறது. வசதிப்பட்டால் புகைப்படத்துடன் கூட வெளியிட எண்ணம்தான். கண்ணன் சந்தாதார்களுடன் மட்டும் இல்லாது, கண்ணன் வாங்குகிற மற்றக் குழந்தைகளுக்கும் இது போன்ற சந்தர்ப்பம் தருவதுபற்றி யோசித்து வருகிறோம். கூடிய சீக்கிரம் இதைப்பற்றி அறிவிக்க முடியுமென எண்ணுகிறேன்.

'கண்ணனில் பரிசுப் போட்டி வைத்து நாளாகிறதே' என்று சிலர் எழுதியிருக்கிருர்கள். பரீட்சை சமயம் பார்த்துப் பரிசுப் போட்டி ஏற்படுத்துவதா என்று எங்களுக்குத் தயக்கமாக இருக்கிறது. எனவே ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தினுல் நீங்கள் விடுமுறையின்போது அதில் கவனம் செலுத்த வசதியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

காந்தி மண்டப நிதிக்காக மேலும் பணம் அனுப்பியிருப்பவர்கள் வருமாறு: V. லக்ஷ்மீநாராயணன், புதுக்கோட்டை; S. கல்யாண சுந்தரம், கூட்டேரிப்பேட்டை; ஜோதிர்லதாகிரிஜா, ஹைதராபாத். இவர்கள் தனித் தனியே ஒவ்வொரு ரூபாய் அனுப்பியிருக்கிருர்கள்.

இந்தப் பணத்தைக் கவர்னர் அவர்களிடம் சேர்ப்பித்து விடுகிறோம். இனி அனுப்புகிறவர்கள் நேரே அனுப்பிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணன் வெளியீடுகள் அடங்கிய பரிசுப் பாக்கெட்டுகள் இந்த மாதம் 28-ஆம் தேதி முடியக் கிடைக்கும். வேண்டியவர்கள் அதற்குள் எழுதவேண்டும். பிறகு இந்த மலிவு விலையில் கிடைக்காது.

—ஆசிரியர்.



பொழுது விடியும் சமயத்தில் தான் மணிக்கு விழிப்பு வந்தது. மரங்களில் இருந்த குயில்களும் கிளிகளும் 'கூ கூ, கீ கீ' என்று உற்சாகத்துடன் கத்திக்கொண்டிருந்தன. அயர்ந்து தூங்கிய மணி சிறிது தெம்புடன் இருந்தான். பறவைகளின் கீதம் பள்ளியெழுச்சி பாடுவதுபோல் ஆனந்தமாக இருந்தது.

அவனுடைய கை அவனறியாமல் தன் கால் பைகளைத் துழாவியது. உடனே அவன் மனம் திக்கென்றது. கண்கள் கங்கன் படுத்திருந்த பெஞ்சியைப் பார்த்தன. அவனுடைய ஆனந்தமெல்லாம் காற்றோடு காற்றாகப் பறந்து விட்டது. 'கங்கன் எங்கே போனான்? மணிபர்ஸ் எங்கே காணோம்?' என்று அவன் மனசு கிடந்து தவித்தது.

'ஒரு வேளை எல்லாம் கனவோ?' என்றுகூட ஓர் எண்ணம் தோன்றியது. அடுத்த கணமே உண்மை பளிச்சென்று தெரிந்தது. மணி பர்ஸைக் கிளப்பிக்கொண்டு கங்கன் போய்விட்டான் என்பது நன்றாய் விளங்கிவிட்டது.

மணியின் மனசு எப்படியெல்லாம் சங்கடப்பட்டது என்பதை விவரிக்கவே தேவையில்லை. உடம்பில் இருந்த தெம்பெல்லாம் போய்விட்டது. தள்ளாடத் தள்ளாட நடந்து வாசலையடைந்தான். வாசல் கதவு இதற்குள் திறந்து விடப்பட்டிருந்தது. நல்ல சமயம் என்று மணி வெளிப்பட்டான்.

முன்பின் தெரியாத இடம்; கையிலோ தம்படி காசு இல்லை; உலக அநுபவம் இல்லாத இளம் பாலகன்-இவ்வளவு பெரிய சோதனையை அவனால் எப்படித் தாங்க முடியும்? ஆயினும் மணி தைரியத்தை இழக்கவில்லை.

வெளி வாசலைக் கடந்து வந்ததும் வானத்திலே பறவைகள் சத்தமிட்டுக்கொண்டு பறப்பதை அவன் கண்டான். நாலா திசைகளிலும் அவைகள் பறந்து சென்றன. அவைகளுக்கெல்லாம் யார் துணையிருக்கிறார்கள்! அவைகள் எல்லாம் உற்சாகத்துடன் இருக்கும்போது அவன் மட்டும் மனம் இடிந்து போகலாமா? மனிதனுக்கு இயற்கையை விடப் பெரிய துணை ஏது? இயற்கையைக் கவனித்துப் பார்த்தால் மனிதன் எவ்வளவோ தானாகவே கற்றுக்கொள்ளலாமே! இவ்விதம் எண்ணியவாறே மணி வெகுதூரம் நடந்து வந்துவிட்டான். அவன் மனசிலே கங்கனைப் பற்றிய ஞாபகம் இருந்துகொண்டேயிருந்தது. வழியில் எங்காவது அந்தத் திருடன் தென்படுகிறானா என்று அவன் கண்கள் ஆராய்ந்துகொண்டேயிருந்தன. கங்கன் கால் நடையாக அலைந்தால் அல்லவா அவன் கண்களில் தட்டுப்

படப் போகிறுன்? அவனிடம் தான் மணிபர்ஸ் இருந்ததே! அவன் மவுண்ட்ரோடில் உள்ள ஒரு பெரிய ஹோட்டலில் மசாலா தோசையும் வடையுமாகக் கொண்டுவரச் சொல்லித் தின்று கொண்டிருந்தான். மணிக்கு அது எப்படித் தெரியும், பாவம்! அவன் அநாதை ஆசிரமம் எங்கே இருக்கிறது என்று சாலையில் போவோர் வருவோரை விசாரித்துக் கொண்டிருந்தான்.

''அநாதை ஆசிரமமா? அப்படி ஒன்று இருக்கிறதா, என்ன?'' என்று சிலர் அவனையே திருப்பிக் கேட்டார்கள்.

''அநாதை ஆசிரமமா? அப்படி ஏதோ அடையாற்றில் அல்லவா இருக்கிறது போலிருக்கிறது! இது நுங்கம்பாக்கமாச்சே!'' என்றுர் ஒருவர்.

''அநாதை ஆசிரமம் என்று ஒன்றும் இல்லை. மாணவர் இல்லத்தைக் கேட்கிருயா?'' என்றுர் ஒரு பெரியவர்.

''அதுதான் எங்கே இருக்கு, சொல்லுங்களேன்?''

''அது மயிலாப்பூரில் இருக்கிறது. அங்கே உனக்கு யாரைப் பார்க்க வேண்டும்?'' என்றுர் பெரியவர் மீண்டும்.

மணிக்குச் சங்கடமாக இருந்தது. அவரிடம் எல்லாவற்றையும் விவரித்துக் கொண்டிருக்க அவனுக்குப் பொறுமையும் இல்லை; இஷ்டமும் இல்லை. அதனுல், ''சரி; நான் பார்த்துக்கொள்கிறேன்!'' என்று சொல்லிவிட்டு நழுவி விட்டான்.

ஒரு பர்லாங்குத் தூரம் போன போது அங்கே நாலைந்து சிறுவர்கள் நீல வர்ண யூனிபாரம் போட்டுக்கொண்டு வரிசையாகப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அந்த உடை மிகக் கவர்ச்சியாக இருந்தது. எல்லாரும் கட்டுப்பாட்டுடன் நடந்து செல்வதே அழகாக இருந்தது. மணி அவர்களைப் பின்பற்றியே நடந்து சென்றுன். அந்த நீண்ட தெருவின் கோடியில் ஒரு வெள்ளைப் பலகை தொங்கியது. 'பாலர் பவனம்' என்று அதில் கொட்டை கொட்டையாக எழுதியிருப்பதை மணி படித்தான். தெய்வாதீனமாக இந்த இடத்துக்கு வந்து சேர்ந்ததற்காக அவன் சந்தோஷப்பட்டான்.

வாசலில் ஓர் ஆந்திரா போயி நின்று கொண்டிருந்தான். நரைத்த மீசை. அவன் காக்கிக் கோட்டுடன் காட்சியளித்தான். கையில் ஒரு சிறு கைத்தடி. அவனுடைய சட்டைப் பொத்தான்கள் எல்லாம் பளபள வென்று தங்கம் மாதிரி கண்ணைப் பறித்தன.

முன்னுல் சென்ற சிறுவர்களும் கதவைத் தாண்டிக்கொண்டு உள்ளே சென்றனர். அந்தக் காவற்காரன் எழுந்து அவர்களுக்கு வழி திறந்து விட்டான். அவர்கள் பின்னுலேயே வந்த மணியைப் பார்த்ததும் அவன் கதவை இழுத்துச் சாத்திக்கொண்டே கைத்தடியைக் குறுக்கே நீட்டினுன். ''அப்பாய்! ஏங் காவாலி?'' என்று தெலுங்கில் பேச ஆரம்பித்துவிட்டான்.

மணிக்குத் தெலுங்கு தெரியாததால் இதைக் கேட்டதும் கோபம் வந்துவிட்டது. ''கிழவா! நான் ஒண்ணும் காவாலிப் பையன் இல்லை. நானும் இங்கே சேரத்தான் வந்திருக்கேன்'' என்றுன். காவாலி என்றுல் காலாடி, போக்கிரி என்ற அர்த்தத்தில் சிலர் தமிழிலே சொல்வதுண்டு. அதைத்தான் இந்தக் கிழவன் சொல்கிறுன் என்று மணி எண்ணிவிட்டான். கிழவன், ''அப்பா, என்ன வேண்டும்?'' என்று அருமையாகக் கேட்டிருக்கிறுன் என்பது அவனுக்குத் தெரியாது.

ஆனுல் கிழவனுக்குத் தமிழும் நன்றுகத் தெரிந்திருந்தது. ''இங்கே சேரவந்திருக்கியா? எதிலே சேரணும்னு வந்திருக்கே? போய் உங்க அப்பா, அம்மா யாரையானும் கூட்டிக்கிட்டு வா?'' என்றுன்.

''எங்க அப்பா அம்மா இங்கே இல்லியே!''

''அப்ப உங்க வீட்டிலே வேறே பெரியவங்க யாரானும் இருந்தா கூட்டி வா!''

''எனக்கு இங்கே வீடே கிடையாதே!''

''பின்னே எங்கே தங்கியிருக்கே?''

''ஒரு இடத்திலேயும் இல்லே.''

கிழவன் மணியைச் சந்தேகத்துடன் விழித்துப் பார்த்தான்.

''வீட்டிலேருந்து ஓடி வந்திட்டியா?''

மணிக்கு உண்மையை ஒப்புக்கொள்வதே சௌகரியமாக இருக்கும்போலிருந்தது. அதனால் ஆமாம் என்பதுபோலத் தலையை ஆட்டினான்.

''ஏன்?''

மணிக்குக் கிறுகிறுப்பும் மயக்கமுமாய் இருந்தது. காலை வெயிலில் பசியோடு அவன் பல மைல் தூரம் நடந்து வந்திருக்கிறான். இங்கே இந்தக் கிழவனிடம் வந்து மாட்டிக் கொண்டோமே, இவன் கேள்வியாகவே கேட்டுக் கொன்று விடுவான் போலிருக்கிறதே என்று ஆயாசப்பட்டான்.

''இப்போ உங்கிட்டே இதெல்லாம் சொல்ல எனக்கு நேரமில்லே. உள்ளே விடப் போறியா, இல்லையா?''

''இல்லே தம்பி இல்லே! இது சோம்பேறி மடம் இல்லே..

போயிட்டு வா, நல்ல வேளை யிலே!'' என்ருன் கிழவன்.

''ஏன் கிழவா, இப்படி என்னைத் தடுக்கிறே? இது எங்களைப் போன்ற சிறுவர்களுக்காக ஏற்பட்ட சங்கம் தானே?''

''ஆமாம். யார் இல்லேன்னுது?''

''நான் சின்னப் பையன் இல்லியா?''

''யார் இல்லேன்னுது?''

''பின்னே ஏன் விடமாட்டே! மெட்ராஸ்லே சின்னப் பையன் களை இலவசமா படிக்க வைச்சு வளக்கிறதுக்காகத்தானே இந்தப் பாலர் பவனம் இருக்கு? இந்தப் பாலர் பவனத்துக்கு ஒரு கிழவர் முட்டுக் கட்டையா?''

''என்ன, இன்னெரு வாட்டி சொல்லு! இலவசமா...வளர்க் கிறுங்களா? யாரை? யாரு?''

கிழவன் பகபகவென்று அடி வயிற்றை இழுத்துக் கொண்டு சிரித்தான். ஆஸ்துமாக்காரன் இறுமுவதுபோல் விழுந்து விழுந்து சிரித்தான்.

''பாம்...பாம்!''

வாசலில் ஒரு கார் வந்து நின் றது. கிழவனுடைய சிரிப்பு எந்த ஊருக்குத்தான் ஓடிற்ருே என் னவோ. அவன் சடக் கென்று நிமிர்ந்து நின்று, கையை எடுத் துக் கும்பிட்டு, கதவைத் திறந்து விட்டான். கார் உள்ளே நுழைந் தது. மணியும் உள்ளே நுழைந்து விட்டான்.

வாசல் காவற்காரக் கிழவன் பையன் உள்ளே போய்விட்டதை யறிந்து துரத்திக்கொண்டே ஓடி வந்தான். அதற்குள் மணி சிட் டாகப் பறந்து கட்டிடத்துக்குள்ளே போய்விட்டான். கிழவன் இவ னைத் தேடுவானு, காவல் செய் வானு? அதனுல் திரும்பித் தன் னிடத்துக்குப் போய்விட்டான்.

மணி வழியில் சந்தித்த ஒரு சிறுமியைப் பார்த்து, ''இங்கே காரியதரிசி இருக்கும் இடம் எது?'' என்று கேட்டான்.

அவள் மாடிமீது ஏறிப் போக வேண்டும் என்று வழியையும் காட்டிவிட்டுப் போனுள். மணிக்கு அந்த இடத்தைப் பார்க்கப் பார்க் கப் பிரமிப்பாக இருந்தது. பையன்களும் சரி, பெண்களும் சரி எல்லாரும் புது மோஸ்தர் ஆடை களும் உயர்ந்த அந்தஸ்துக்குரிய தோரணையிலும் காணப்பட்டார் கள். அவர்களுடைய உல்லாச மான சிரிப்பையும் வேடிக்கைப் பேச்சுக்களையும் கேட்டுவிட்டு மணிக்குத் தன்னை நினைக்கவே வெட்கமாக இருந்தது. அவன் மாடியை அடைந்ததும் தயங்கிய படி காரியதரிசியின் அறை வாசலை அடைந்தான். மேலே விசிறி சுற் றிக்கொண்டிருந்தது. வாசல் சிறிய கதவுகளால் அடைக்கப் பட்டிருந் தது. வெளியிலே கூப்பிட்ட குர லுக்கு ஏன் என்று கேட்க ஓர் ஆள் உட்கார்ந்திருப்பான் போலிருக்கி றது. அங்கே ஆளைக் காணும்.

மணி சிறிது நேரம் அங்கே உட் கார்ந்தான். அப்புறம் துணிந்து உள்ளே போனுன். கேட்டால், ''கங்கனேடு வந்திருக்கிறேன்'' என்று சொன்னுல் போச்சு என்று எண்ணிக்கொண்டான். அவர்தான் ரொம்ப ரொம்ப நல்லவர் என்று கங்கன் சொல்லியிருக்கிருனே!

'டப்' பென்று கதவைத் தள்ளிக் கொண்டு மணி உள்ளே நுழைந் தான். அங்கே உட்கார்ந்திருப்பது யார்? இவரா காரியதரிசி? இவரா? யாரோ ஒரு மாமியல்லவா உட் கார்ந்திருக்கிருள்? மணி வந்து நின்றதும் அந்தப் பெண்மணி, மெதுவாக தலையைத் தூக்கி, ''எவுரு?'' என்று கீச்சுக் குரலில் கேட்டாள்.

'அட சனியனே-இந்த அம்மா ளும் தெலுங்கே பேசருளே! ஒரு வேளை அந்தக் காரியதரிசி வீட்டு மாமியோ இவள்? அவருடைய ஒய்போ?' என்று எண்ணிக்கொண் டான் மணி. மிகவும் மரியாதை யோடு, ''நான் காரியதரிசியைப் பார்க்க வந்திருக்கேன். நான் இந் தப் பவனத்திலே சேரப் போறேன்..'' என்ருன்.

''ஓ..அப்படியா? நான்தான் தம்பி, காரியதரிசி. உனக்கு என்ன வேணும் சொல்லு!''

''நான் ரொம்ப ஏழை. மூணு நாளா சாப்பிடலே. இங்கே படிக் கிறதுக்காக..''

''என்னது என்னது? ஏழையா? உன்னி யாரு உள்ளாற விட்டது? ஏ சுப்பையாகாரு! என்னு கண்ட பையன்களை எல்லாம் உள்ளாற வுட்டுட்டே!'' என்று கூப்பாடு போடத் தொடங்கி விட்டாள்.

''தம்பி, மரியாதையா வெளியிலே போயிடு.. உம் உம்..'' என்று வேறு விரட்டினுள். அதற்குள் காரில் வந்த பெண்மணி கல கலவென்று சிரித்துக் கொண்டே வந்தாள். அவளைக் கண்டதும் காரிய தரிசி முகத்தை எப்படித் தான் அப்படி சிரிக்கிற பாவனையாக மாற்றிக் கொண்டாளோ!

இரண்டு பேரும் சிறிது நேரம் ஒரே குலாவலாகக் குலாவினுர்கள். அவளுக்கு மணி இன்னும் நிற்பது வேதனையாகவே இருந்தது.

''என்னு நீ போவல்லே இன்னும்?''

''நான் வந்து மூனு நாளா—''

''இங்கே உங்களையெல் லாம் சேக்கறது இல்லே. போ போ!''

அதற்குள் காரில் வந்த அம்மாள், ''இது என்ன பையன்கள் சேரும் இடம்தானே? இவனைச் சேக்கிற துக்கு என்ன, புஷ்பா?'' என்றுள்.

உடனே புஷ்பா என்ற அந்தக் காரியதரிசி மயக்குவது போலச் சிரித்து, ''யூஸி.. அது வந்து இதைப் போலப் பிள்ளைங்களே சேத்தால் அப்புறம் இங்கே யாரும் பெரிய மனுஷங்க தம் பிள்ளைங்களை அனுப்ப மாட்டாங்க. எல்லாம் ஆபீஸர் வீட்டுப் பிள்ளைங்க, பெரிய பெரிய மனுசாள் வீட்டுப் பிள் ளைங்க. அதுலே இப்படிப்பட்ட தெருப் பிள்ளைங்களை சேர்க்க லாமா? அவங்க பேரெண்ட்ஸ் எல் லாம் நூறு ஆயிரம்னு டொனே ஷன் கொடுக்கிருங்க. அவுங்க தயவு வேணுமா?'' என்றுள்.

''இது அநாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றும் இடம்னு சொல்லிப் புட்டு இங்கேயும் இப்படியா?'' என்றுள் அந்த அம்மாள்.

''நோ நோ..எல்லாம் இங்கே அம்மா இல்லாத அப்பா இல்லாத குழந்தைங்கதான். ஆனு..வந்து உங்களுக்குத் தெரியாது..நான் அப்புறம் சொல்றேன்'' என்று மணிக்குப் புரியாதபடி ஆங்கிலத் தில் பேசத் தொடங்கினுள்.

அதற்குள் சுப்பையா என்ற சேவகன் வந்து மணியை அழைத் துக்கொண்டு போய் கேட்டுக்கு வெளியே விட்டு விட்டான். போகும்போது மணி புதிய அம் மாள் வந்திருந்த காரின் நம்பரைக் குறித்துக்கொண்டு போனுன்.

(தொடரும்)

அழ. வள்ளிப்பா

பையன்:
ஆமை யாரே, ஆமை யாரே,
எங்கே போகிறீர்?
அவச ரமாய்ப் போகிறீரோ?
சொல்லுமே ஐயா.

ஆமை:
அருமையான பேர னுக்கு
அம்மை கண்டதாம்.
அவச ரமாய்த் தந்தி யொன்று
வந்த தப்பனே!

பையன்:
வண்டி கட்டிச் சென்றி ருந்தால்,
வசதி யாகுமே?

ஆமை:
வண்டி மாடு படுத்துக் கொண்டால்
நேர மாகுமே!

பையன்:
காரி லேறிச் சென்றி ருந்தால்,
காற்றுய்ப் பறக்குமே?

ஆமை:
காட்டு வழியில் நின்று விட்டால்
மோச மாகுமே!

பையன்:
ரெயிலி லேறிச் சென்றி ருந்தால்,
நன்மை யாகுமே?

ஆமை:
நடுவ ழியில் கவிழ்ந்து போனுல்,
நாச மாகுமே!

பையன்:
சரிதான், எனது சைக்கிள் பின்னுல்
ஏறிக் கொள்ளுவீர்;
'சரச ரெ'ன்று ஓட்டிடுவேன்;
நொடியில் செல்லுவீர்.

ஆமை:
போலீஸ் காரர் பிடித்துக் கொள்வார்
இரண்டு பேரையும்.
போதும், போதும், நடந்தே செல்வேன்.
வணக்கம் அப்பனே!

நமது தமிழ்த் தாத்தா

நமது தமிழ்த் தாத்தா என்றால் யார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் நமக்கெல்லாம் சொந்தமானவர். தமிழ் உலகுக்கே சொந்தமானவர். மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களைத்தான் நாமெல்லாரும் சொந்தமாக, அருமையாகத் தமிழ்த் தாத்தா, தமிழ் வளர்த்த தாத்தா என்று குறிப்பிடுகிறோம்.

தமிழ்நாட்டுக்கே பெருமை தேடித்தந்தவர் இந்தத் தாத்தா. பழம் பெரும் இலக்கியங்களையெல்லாம் தேடி எடுத்துத் தமிழர்களுக்கே தனமாக விட்டுச் சென்றவர். ஆங்கில மோகம் இருந்த காலத்தில், ஆங்கிலம் படித்தவர்கள் தவிர மற்றவர்கள் உத்தியோகம் முதலிய பதவிகள் பெறமுடியாது என்று இருந்த காலத்தில், தமிழையே தமது மூச்சுக் காற்றாகக் கொண்டு, பயின்று, பாண்டித்தியம் பெற்று, தமிழுக்குப் பெருமை தேடிய பெருமகனார் இவர். அதனால் தமக்கும் பெருமை தேடிக்கொண்டவராகிவிட்டார்.

நமது முன்னோர்களுக்கு எல்லாம் படிக்கக் கிடைக்காமல் போன சங்க நூல்களையெல்லாம் நாம் இன்று பயிலும்படி செய்த பெருமை இவருடையதுதான். பசியையும் பட்டினியையும் பொருட்படுத்தாது இவர் அந்த ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பதிப்பித்திருக்கிறார். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இவர் தமிழன்னைக்குப் புரிந்த தொண்டுக்குத் தமிழுலகம் மிகுந்த கடமைப்பட்டுள்ளது.

அவருடைய வரலாற்றையும் நூல்களையும் படித்தால்தான் தமிழ்நாட்டின் பெருமை முழுவதும் நமக்குத் தெரியும். தமிழின் பெருமை முழுவதையும் நாம் அறியமுடியும்.

தாம் கண்டும் கேட்டும் அறிந்த செய்திகளைத் தித்திக்கும் எளிய தமிழில் அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய நூறாவதாண்டு நிறைவு விழா இந்த மாதம் 19, 20 தேதிகளில் பல இடங்களில் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அகில இந்திய ரேடியோவிலும் விசேஷ சிறுவர் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த இதழில் அவர் எழுதிய ஹாஸ்யம் நிறைந்த வரலாறு ஒன்றை வெளியிட்டிருக்கிறோம். நமது தமிழ்த் தாத்தா எழுதியவற்றை நாம் இன்றே படிக்கத் தொடங்குவோம்; என்றும் படித்துணர அவை நமக்குத் துணை புரியும்.

டிங்கிறனே

★

திருவாவடுதுறை யாதீனத்து மகா வித்துவானுக இருந்து புகழ்பெற்று விளங்கிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர் களைப்பற்றி அறியாத தமிழறிஞர் இரார். பிள்ளையவர்கள் நூற்றுக் கணக்கான மாணுக்கர்களுக்குப் பாடஞ்சொல்லியும் பல நூல்களை இயற்றியும் தமிழுலகத்துக்கு ஒப்பற்ற உதவி செய்திருக்கிறுர் கள். அவர்களுடைய விரிவான வரலாறுனது தனியே எழுதி வெளியிட்டுள்ள அவர்கள் சரித் திரத்திஞல் நன்கு விளங்கும்.

அவர்களிடம் நான் பாடங் கேட்டு வந்த காலத்தில் சவேரி நாத பிள்ளை என்ற ஒரு கிறிஸ்த வரும் உடனிருந்து பாடம் கேட்டு வந்தார். அவர் பிள்ளையவர் களிடம் மிகுந்த அன்புடையவர்; பிள்ளையவர்களுடைய இறுதிக் காலம் வரையில் உடனிருந்து வந்தவர். பிற்காலத்தில் அவர் காரைக்காலில் தமிழ்ப் பண்டித ராக இருந்து புகழ் பெற்றுர்.

பிள்ளையவர்கள் மாயூரத்திலே பல வருஷங்கள் இருந்தார்கள். அவர்களுடைய வீடு ஸ்ரீ மாயூர நாத ஸ்வாமி ஆலயத்தின் தெற்கு வீதியில் இருந்தது. பிர தாப முதலியார் சரித்திரம், நீதி நூல் முதலியவற்றை இயற்றியவ ரான வேதநாயகம் பிள்ளை மாயூ ரத்தில் அப்போது முன்ஸீபாக இருந்தனர். பிள்ளையவர்களும் அவ ரும் அடிக்கடி சந்தித்துப் பழகுவ துண்டு. அக்காலத்தில் வேதநாயகம் பிள்ளை மாயூரத்திற்கு அருகிலுள்ள கூறைநாட்டில் சாலியன் சத்திரத் தில் இருந்து வந்தார்.

ஒரு நாள் பிற்பகலில் பிள்ளை யவர்கள் சவேரிநாத பிள்ளையை ஏதோ ஒரு காரியமாக வேத நாயகம் பிள்ளையிடம் அனுப்பினுர் கள். அவ்விதம் சென்ற சவேரி நாத பிள்ளை இரவில் நெடுநேரமா கியும் திரும்பி வரவில்லை. பிள்ளை யவர்கள் இரவு பன்னிரண்டு மணி வரையில் விழித்திருந்தார்கள்: அப் பால் என்னிடம் சொல்லிவிட்டுப் படுத்துக் கொள்ளச் சென்றுர்கள். பின்பு நான் அவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு காத் திருந்தேன். இரவு இரண்டு மணிக்குமேல் அவர் வந்தார். ''ஏன் இவ்வளவு நேரம் ஆயிற்று?'' என்று நான் கேட்க அவர், ''எல் லாம் காலையில் விரிவாகச் சொல்லு கிறேன்; இப்போது மிகவும் களைப் பாக இருக்கிறது'' என்று சொல்லி உடனே படுத்து உறங்கிவிட்டார்.

வழக்கம் போலவே விடியற் காலையில் எழுந்த பிள்ளையவர்கள், ''சவேரிநாது வந்துவிட்டானு?'' என்று என்னைக் கேட்டார்கள். ''இரண்டு மணிக்கு வந்தார்'' என்று நான் சொல்லிக்கொண் டிருக்கையிலேயே சவேரிநாத பிள்ளை எழுந்து வந்தார். பிள்ளை யவர்கள் அவரை நோக்கி, ''என்ன அப்பா! ராத்திரி வெகு நேரம் வரையில் உன்னைக் காண வில்லையே: என்ன காரணம்?'' என்று கேட்டார்கள். உடனேஅவர் பின்வருமாறு சொல்லலாஞர்:-

''இரண்டு மணிக்கு வந்ததே பெரும் பிரயாசையாகி விட்டது. நேற்று முன்ஸீப் அவர்களிடம் சென்றபோது அவர்கள் எங் கேயோ வெளியே போயிருந்தார் கள். வீட்டிற்கு வருகையில் இரவு ஒன்பது மணியாயிற்று. பிறகு அவர்களோடு பேசவேண் டிய காரியத்தைப் பேசிவிட்டுத் திரும்பினேன். அப்பொழுது மணி பதினென்று இருக்கலாம். மையிருட் டாக இருந்தது.

''சிறிது தூரம் வந்தேன். வழியி லுள்ள பெரிய மைதானத்திற்கு அருகில் வந்தபோது திடீரென்று காலில் ஏதோ தட்டியது; கட்டை யாக இருக்கலாமென்று எண்ணி நான் சிறிது ஒதுங்கிவர ஆரம்பித் தேன். அந்த இடத்திலும் என் காலில் ஏதோ ஒன்று இடித்தது. இருட்டு மிகுதியாக இருந்ததால்

எனக்கு உடனே சிறிது பயம் ஏற்பட்டது. சற்று நிதானித்து நின்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அந்த இடத்தை ஊன்றிக் கவனித்தேன். என்ன ஆச்சரியம்! அங்கே வழி நெடுக அநேக ஜனங்கள் உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். அவர்கள் சிறிதேனும் சப்தம் செய்யவில்லை. அவர்களுள் இருவருடைய உடம்புகளே என் காலில் தட்டுப்பட்டனவென்று அப்போது தெரிய வந்தது. 'இவர்கள் எதற்காக இங்கே மரங்கள்போல அசைவில்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள்?' என்று யோசித்தேன். மெல்லக் குனிந்து ஒருவரைத் தடவித் தொட்டுப் பார்த்து, 'வழி விட வேண்டும்' என்று பயத்தோடும் விநயத்தோடும் வேண்டிக் கொண்டேன். அதே சமயத்தில் மனத்துக்குள்ளே, 'ஏதாவது நல்ல வழி விட வேண்டும்!' என்று கடவுளையும் பிரார்த்தித்தேன்.

''நான் யாரை வேண்டிக்கொண்டேனோ அவர் திடீரென்று எழுந்திருந்து என் வாயைப் பொத்தினார்; உடனே அருகில் இருந்த மற்றொருவர் எழுந்திருந்து என் உச்சந் தலையில் ஒரு கையையும் மோவாய்க் கட்டையில் ஒரு கையையும் வைத்து அழுத்தினார். எனக்கு நடுக்கமெடுத்தது; 'இனிமேல் ஐயா* அவர்களிடம் சென்று அவர்களைப் பார்ப்பது சந்தேகந்தான்' என்று முடிவு பண்ணிக் கொண்டேன். என் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. உடம்பெல்லாம் வேர்வை வெள்ளத்தில் மூழ்கியது.

''வாய்விட்டுக் கத்தலாமென்றாலோ வாயைத் திறக்க முடியவில்லை. 'இனி என்ன செய்வது?' என்றெண்ணினேன். என்னைப் பிடித்திருந்தவர்கள் கருணை புரிந்தாலொழிய விடுதலை பெற வேறு வழியில்லை யென்று புலப்பட்டது. ஆகையால் என் தலையை அழுத்தியவருடைய மோவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிக் கேட்டுக்கொள்வது போல ஒரு பாவனை செய்தேன். அவருடைய கைகள் நெகிழ்ந்தன. 'ஐயா! நீங்கள் யார்? என்னை ஏன் தடுக்கிறீர்கள்?' என்றேன். அதற்குள் மற்றொருவர் எழுந்து என் காதில், 'முட்டாளே! பேசாதே; பாரத கதை நடக்குது' என்று சொல்லி விட்டு என் கையைப் பிடித்து இழுத்துக் கீழே உட்கார வைத்துவிட்டார். 'நாம் நினைத்தபடி அவ்வளவு அபாயம் இல்லை' என்ற ஆறுதல் எனக்கு உண்டாயிற்று. பெருமூச்சு விட்டேன்.

''அப்படியே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். 'மனிதர்கள் நடக்கிற சாலையில் பாரத கதை நடக்கிறதாவது; இவர்கள் ஊமைகளாக ஏன் உட்கார்ந்திருக்கிறார்கள்?' என்று எண்ணி அங்குமிங்கும் பார்த்தேன். இந்த இருண்ட இடம் எவ்வளவு மயக்கமாக இருந்ததோ அவ்வளவு மயக்கமாக என் மனமும் இருந்தது.

''சிறிது நேரங் கழித்து ஒருவருக்குந் தெரியாமல் மெல்ல எழுந்து நின்று சுற்றிலும் நோக்கினேன். ஒரே ஜனக் கூட்டமாக இருந்தது. அந்தக் கூட்டத்தைத் தாண்டிச் செல்வது அசாத்தியமென்று நிச்சயித்து எங்கே பாரதம் நடக்கிறதென்று ஓசைப்படாமல் நின்றுகொண்டே கவனித்தேன்.

''சாலையின் வடபாலுள்ள வெளியிடத்தில் ஒரு மேடை காணப்பட்டது. பெரிய விளக்கொன்று அங்கே எரிந்தது. அந்த வெளிச்சத்தால் இருவர் அம்மேடையில் இருந்து ஒருவரையொருவர் நோக்கி எழும்பி எழும்பி ஏதோ சொல்லிக்கொண் டிருந்ததாக மட்டும் தெரிய வந்தது. ஒருவர் கையில் உடுக்கையும் மற்றொருவர் கையில் பம்பையும் இருந்தன. அவர்கள் என்ன சொல்லுகிறார்களென்பதை அறிந்து கொள்வதற்கு இயன்ற வரையில் முயன்று கவனித்தும் ஒன்றும் தெரியவில்லை. பின்னும் நின்றபடியே கவனித்தேன். ஏதோ பாட்டுப் போன்ற ஒரு தொனி காதில் விழுந்தது. அதனோடு இடை யிடையே, 'ஆமாமா!' என்ற சத்தமும்,

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைக் குறிப்பது.

உடுக்கையின் ஒலியும், பம்பையின் முழக்கமும் ஒன்றன்பின் ஒன்ருகக் கேட்டன. அந்த முழக்கங்களுக்கு முன்னும் பின்னும் என்ன கூறப்படுகின்றனவென்று காதை நிமிர்த்திக் கொண்டு கேட்டேன். 'பீமசேன மவராசா, மவராசா, மவராசா' என்ருர் ஒருவர். 'ஆமாமா!' என்று மூன்று முறை வழங்கினுர் வேருெருவர். தொடர்ந்து உடுக்கையும் பம்பையும் ஒலித்தன. 'மவராசா, மவராசா, மவராசா' என்ருர் முதல்வர். 'ஆமாமா!' என்ருர் பின் பாட்டுக்காரர். 'மரத்தேப்பூ, மரத்தேப்பூ, மரத்தேப்பூ' என்று உத்சாகத்தோடு கைகளைக் கீழும் மேலும் அசைத்துக்கொண்டே கர்ச்சனை செய்தார் பிரசங்கியார்.

''பின் பாட்டுக்காரர், 'ஆமாமா' என்று மூன்று முறை முழங்கினுர்: அப்பால் உடுக்கையின் ஓசையும், பம்பையின் முழக்கமும் எழுந்தன.

''இப்படிச் சில நிமிஷம் முழங்கியபின் உடுக்கைக்காரர், 'டிங்கினுனே, டிங்கினுனே, டிங்கினுனே' என்று சொல்லி ஆலாபனம் செய்யத்தொடங்கி விட்டார். ஜனங்களெல்லோரும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் மட்டும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. மேடையில் நடந்த கதை பாரதமென்று, 'பீமசேன மவராசா' என்ற சத்தத்தால் அறிந்தேன். அதற்கு மேல் நான் கேட்ட முழக்கங்களின் பொருள் எனக்கு விளங்கவில்லை. யோசித்துப் பார்த்தேன்: தலைவலிதான் எடுத்தது.

''இவ்வண்ணமே மேலும் நிகழ்ந்தவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த அந்தக் கூட்டம் கலைவதற்கு நெடுநேரம் ஆயிற்று. கதை ஒருவகையாக முடிந்ததென்பதைக் கூட்டம் கலைந்ததனுல் அறிந்து கொண்டேன். சிறைச்சாலையிலிருந்து விடுபட்டவனைப் போல் வேகமாக நடந்து வரலானேன். வரும்பொழுது ஒருவரோடு பேசி வருகையில் பிரசங்கியார் சொன்ன வாக்கியம், 'ஒரு

கிட்டு: அந்த ஒத்தவெடி அதிர்வேட்டைவிட நல்லாச் சத்தம் கேக்கும்னுன் கடைக்காரன். புஸ்ஸுனு போயிடுத்துடா!

ராமு: அவன் சும்மா 'வெத்து வேட்டு' விட்டிருக்காண்டா உன்னிடம். —சீனு.

யானையை அடிப்பதற்குப் பீமசேனன் மரத்தைப் பிடுங்கினுன்' என்பதென்று தெரியவந்தது. அவ்வாக்கியத்தை எனக்கு விளக்கிய அந்தப் பாரதரஸிகர், 'இதுகூட உனக்குத் தெரியவில்லையா!' என்று என்னை நோக்கி இரங்கிக் கூறினுர். 'இந்தக் கதைக்குத்தானு இவ்வளவு கூட்டம்! ஐயா அவர்கள் புராணப் பிரசங்கத்துக்கு இத்தனை ஜனங்கள் வருவதைக் காணுேமே. இந்த நாகரிக காலத்திலும் ஜனங்கள் அறிவுநிலை இப்படி இருக்கிறதே!' என்று வியந்துகொண்டே வந்து சேர்ந்தேன்.''

இதைக் கேட்ட நாங்கள் வயிறு குலுங்கச் சிரித்தோம். அன்று முதல் சில வாரங்கள் வரையில் அங்கே வருபவர்களுக்கெல்லாம் இந்த 'டிங்கினுனே' வரலாற்றைப் பிள்ளையவர்கள் சவேரிநாத பிள்ளையைக் கொண்டு சொல்லிக் காட்டி வந்தார்கள்.

உத்தம புத்திரன்

ப. ரா.

தொள்ளைக் காது குப்பன் செட்டியார் என்றால் சுற்று வட்டாரத்தில் மிகப் பிரபலம். அவரிடம் எத்தனை செல்வம் குவிந்து கிடந்ததோ, அத்தனை கஞ்சத்தனம் அவரது ரத்தத்தில் ஊறியிருந்தது. ஏழைகளுக்கு என்று ஒரு செல்லாத காலணாக் கூடத் தர்மத்துக்கு ஒதுக்கமாட்டார். என்றாவது ஒரு நாள் தெருப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தாரானால், அதை வைத்துக்கொண்டு பத்து நாட்கள் அவர் வீட்டில் சம்பிரமச் சமையல் நடக்கும்.

இப்பேர்ப்பட்ட கிருபண சிகாமணிக்கு ஒரு புத்திரனும் இருந்தான். அவன் பெயர் தர்மராஜன். வயதில் சிறிய பையன்தான் என்றாலும் தன் தந்தையைப் போலன்றி அவனுக்கு நல்ல தாராளமான இதயம் இருந்தது. செட்டியார் பிச்சைக்காரர்களை விரட்டியடிக்கும் விமரிசை கண்டு அவன் மனங் கருகிக் கண்ணீர் உகுத்த நாட்கள் பல.

ஆரம்பப் பள்ளிக்குப் பீஸ் ஒன்றும் கட்ட வேண்டியதில்லை. ஆகையால் செட்டியார் பையனைப் படிக்க அனுப்பினர். தர்மராஜன் ஐந்தாவது வகுப்புத் தேறிவிட்டான். முதல் பாரத்திலிருந்து பணம் கட்டாமல் படிக்க முடியாது. செட்டியார் கவலைப்படத் தொடங்கினர். தர்மராஜனும் கவலைப்பட்டான். அவனுக்கு மேலே படிக்க வேண்டுமென்னும் ஆவல் இருந்தது.

மகனுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும்படி செய்யச் செட்டியார் முயன்றார். ஏழைப் பையன்களுக்கென்று ஒதுக்கப் பட்ட பணம் செட்டியாரின் மகனுக்குப் பயன் படுவது நியாயமா? அந்த முயற்சியில் அவர் வெற்றி பெருதது மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான்! 'திராக்ஷைப் பழம் புளிக்கும்' என்று ஏமாந்து போன நரியின் கதையாகப் பையனுக்கு இன்னும் படிப்பு எதற்கு என்று எண்ணமிட்டார் அவர்.

''அடே தர்மா, இங்கே வா. 'பள்ளிப் படிப்புப் புள்ளிக்கு உதவாது' என்று பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். வீணாகக் காசைச் செலவழித்துக் கொண்டு படித்து என்ன பயனைக் காணப் போகிறாய்? எனக்கும் கடையில் ஆள் தேவையாக இருக்கிறது. நீ வந்து ஒத்தாசையாக இருந்து, அதோடு வியாபார நுணுக்கங்களையும் சிறிது கற்றுக்கொள்!'' என்று மகனிடம் செட்டியார் சொன்னார். பாவம், பையன் முகம் தொங்கிப் போயிற்று. சொல்பத் தொகையை மிச்சம் பிடிப்பதற்காகத் தகப்பனார் தன் ஆசையில் மண்ணைப் போடுகிறாரே என்று தர்மராஜன் மனம் புழுங்கினான்.

குப்பன் செட்டியாரின் வியாபாரம் வட்டிக்குப் பணம் கொடுப்பது. இந்தத் தொழிலில் ஏழை மக்களை எவ்வளவு தூரம் கசக்கிப் பிழியலாம் என்பதைத் தர்மராஜன் கண்கூடாகக் காணச் சந்தர்ப்பம் வாய்த்தது. வட்டி மேல் வட்டி போட்டுக் காசைக் கறந்து, முடிவில் ஜனங்கள் கண்ணில் மண்ணைத் தூவி அவர்களது உடைமையை அபகரித்துக் கொள்ளும் கொடூர வித்தையைக் குப்பன் செட்டியார் சர்வ சாதாரணமாகக் கையாண்டார். அந்தக் கொடுமை பையனது இளம் இதயத்தில் தைத்தது.

'தகப்பனார் கேவலம் ஒரு கஞ்சனாக மட்டுமிருந்தால் பரவாயில்லை; தொழிலில் இவருக்கு இவ்வளவு பேராசையும் கல்நெஞ்சமும் ஏன்? இதே தொழிலை நியாய

மாக நடத்தி ஜீவிக்க முடியாதா? இந்த அநியாயத்துக்கு நாமும் உடந்தை மாதிரி யல்லவா உட்கார்ந்திருக்கிறோம்? போதாக் குறைக்கு அபூர்வமான இந்தத் தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று வேறு எதிர்பார்க்கிறாரே!' என்று அவன் எண்ணமிட்டான்.

''அடே, அதோ ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் வருகிறான் பார். அவன் கையில் நாலைந்து காலணாக் கள் இருக்கும். இந்தச் செல்லாத காலணாவை அதில் கொண்டு போட்டுவிட்டுச் சில்லறை எடுப் பது போல் வேறு நல்ல காலணா ஒன்றை எடுத்துவிடு!'' என்றார் தந்தை. பையன் தயங்கினான்.

''போடா, பயப்படாமல். அவன் குருடன் தான். கண் தெரியாது அவனுக்கு'' என்று செட்டியார் தைரியமூட்டினார்.

''அவனுக்குக் கண் தெரியா விட்டாலும் கடவுளுக்கு நன்றாகத் தெரியும், அப்பா. இது மகா பாவம்!'' என்றான் தர்மராஜன். பெரியவர் மலைத்துப் போனார்.

''ஏண்டா, நான் சொல்லு கிறேன்; கேட்கமாட்டேன் என்கி றாயா? என்னைவிடப் பெரிய கடவுள் ஒருவர் உண்டா உனக்கு? 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று நீ வாசித்த தில்லையா?''

தர்மராஜன் இந்த முறை அஞ்ச வில்லை. அக்கிரமத்தை நேர்முக மாக நின்று எதிர்க்க வேண்டு மெனத் துணிந்துவிட்டான் அவன்.

''வாசித்திருக்கிறேன். அதற்கு அடுத்தாற் போலவே 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்றும் வருகிறது. அது தெரி யுமோ உங்களுக்கு? இன்னும் ஓரிடத்தில் 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை யொக்கும்' என்றும் படித்திருக்கிறேன்.''

''சீ, அதிகப் பிரசங்கிப் பயலே!'' என்று உறுமிய செட்டியார் கண் மண் தெரியாத கோபத்தில் தராசின் பெரிய படிக்கல் ஒன்றை எடுத்துப் பையன்மீது வீசினார். அது 'மொட்'டென்று அவன் நெற்றியில் தாக்கியது. பீறிட்டுப் பாயும் ரத்தத்தைக் கையால் அமுக் கியவண்ணம் தர்மராஜன் கடைக்கு வெளியே பாய்ந்தோடினான். இனி மீண்டும் தன் தந்தையின் முகத் தில் விழிப்பதில்லையென்ற உறுதி அவன் மனத்தில் உருவாகியது.

* * *

நிலா வெளிச்சத்தில், வண்டிக் காரன் ஆனந்தமாகத் தெம்மாங்கு பாட, 'ஜல் ஜல்'லென்ற சலங்கை ஒலியுடன் வண்டி மாடுகள் நடை போட்டன. லக்ஷாதிபதிப் பிரபு வான வைரமுடி வினைதீர்த்தான் செட்டியார் பழங்காலத்து ஆசாமி. உயர்ந்த ஜாதிக் காளை கள் பூட்டிய இந்த வில் வண் டிச் சவாரியைத்தான் அவர் அதிகமாக ரசித்தார். இப்போது ஏதோ வியாபார நிமித்தம் வெளி யூர் போயிருந்த அவர் வண்டியில் வீடு திரும்பிக்கொண் டிருந்தார்.

திடீரென மாடுகள் நின்று விட்டன. வண்டிக்காரன் அதட்டி விரட்டியும் அவை நகரவில்லை. அப்போதுதான் சாலையின் குறுக்கே கிடந்த சிறுவனின் உடல் அவன் கண்ணிற் பட்டு அவனுக்கு விஷயம் புரிந்தது. ''எசமான்!'' என்று கீழே குதித்தான்.

வண்டிக்குள்ளே அரைத் தூக் கத்திலிருந்த வைரமுடி பதறி விழித்தார். எங்கே திருடர்கள் சூழ்ந்துகொண்டு விட்டார்களோ என்ற அச்சத்தில் தயங்கினார்.

''பையன், சாமி! நடு ரோட் டில் மயங்கி விழுந்து கிடக்கிறான்'' என்றான் வண்டிக்காரன். செட்டி யார் துணிவு வரப்பெற்றவராய்க் கீழே இறங்கினார். பையனுக்குக் களைப்பாலோ, பசியினாலோ மயக்கம் போட்டிருக்க வேண்டு மென்று அவருக்குத் தெரிந்தது. அவன் நெற்றியில் ரத்தம் உலர்ந்த காயத்தையும் கண்டார். அவர் மனம் கசிந்துருகியது.

''பாவம்! யார் வீட்டுப் பையனோ தெரியவில்லை! அவனை எடுத்து வண்டிக்குள் படுக்க வை. முகத்தில் கொஞ்சம் தண்ணீர் தெளி..'' என்று கூறினார்.

வண்டி வினைதீர்த்தான் செட்டியாரின் ஊரை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தது.

கிட்டத்தட்ட நள்ளிரவு நேரத்தில் எல்லோரும் வீடு வந்து சேர்ந்தனர். முக்கால் வாசி சுய உணர்வு பெற்றுவிட்ட பையன் அந்த மாளிகையைக் கண்டு பிரமித்துப் போனான்.

பொழுது விடிந்தது. கண் விழித்ததும் அவன் கண்டது படுக்கை யருகே நின்ற செட்டியாரையும் அவர் மனைவியையும்தான். கையில் பால், பலகாரங்களுடன் அவர்கள் தயாராகக் காத்திருந்ததாகத் தோன்றியது. பையன் துள்ளியெழுந்தான்.

'பரவாயில்லை தம்பி. படுத்துக்கொண்டிரு. இதை உன் சொந்த வீடு மாதிரி பாவித்துக் கொள்..'' என்று செட்டியார் கையமர்த்தினார்.

''உன் பெயர் என்ன, தம்பி?'' என்று அந்த அம்மாள் கேட்டாள்.

''தர்மராஜன்.''

''தர்மு. நீ நிசி வேளையில் அப்படி நடு ரோட்டில் விழுந்து கிடக்கக் காரணம் என்ன? என்னிடம் மறைக்காமல் உண்மையைச் சொல். நீ வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு ஓடி வந்து விட்டாயென்று நினைக்கிறேன். சரிதானா?'' என்றார் செட்டியார்.

தர்மராஜன் தயக்கத்துடன் தலையசைத்தான். தன்னிடம் இவ்வளவு பேரன்பும் ஆதரவும் காட்டிய புண்யாத்மாவிடம் விவரங்களைக் கூறாது செல்ல அவன் மனம் இடந்தரவில்லை. எல்லாவற்றையும் சொன்னான்.

''தம்பீ! உனக்குத் தர்மராஜன் என்ற பெயர் பொருத்தமானதுதான். உன் தகப்பனார் தன் தவற்றை எண்ணி வருந்தும் காலம் விரைவில் வரும். பணம் படைத்தவனின் முதற் கடமை எளியவர்

களுக்கு உதவுவதே. அதை அவர் உணர்ந்து திருந்தும் வரை நீ எங்கள் வீட்டிலேயே இருக்கலாம்'' என்றார் செட்டியார்.

குழந்தை குட்டிகளில்லாத அவர்களுக்கு அன்று முதல் அவனே மகன் போலானான். நல்ல தர்ம சிந்தையுள்ள வைரமுடி அவனை மேலே படிக்கவும் வைத்தார்.

சில வருடங்கள் ஓடின.

* * *

ஒவ்வொரு ஜில்லாவிலும் அட்டூழியங்கள் புரிந்து, போலீஸின் கைக்கு அகப்படாது தப்பி வந்த கொள்ளைக் கூட்டத் தலைவன் மாயாண்டித் தேவன் அந்தப் பிரதேசத்திற்கும் வந்து சேர்ந்தான். குப்பன் செட்டியார் ஏழைகளின் உதிரத்தை உறிஞ்சிச் சேர்த்த பணத்திற்குச் சனியன் பிடித்தது. ஒரே இரவில் அவர் ஓட்டாண்டி ஆனார்.

''அடே திருட்டுப் பயலே! நான் பாடுபட்டுச் சேர்த்த பணத்தையெல்லாம் வாரிக்கொண்டு போகிறாயேடா!'' என்று குப்பன் செட்டியார் அலறினார்.

''செட்டியாரே! நான் திருடன் என்பது வாஸ்தவந்தான். ஆனால் அநியாயமான வழிகளில் செல்வம் சேர்த்த நீ என்னைவிடப் பெரிய பகற் கொள்ளைக்காரன். பரம லோபியான உனக்குப் பயன்படாத பணம் எனக்காவது பயன்படட்டும்!'' என்று கூறிச் சென்றான்.

செட்டியார் நோய்வாய்ப்பட்டார். முடக்கு வாதம் வந்து அவரை அடித்துப் போட்டுப் படுக்கையைவிட்டு எழக்கூடச் சக்தியில்லாது செய்துவிட்டது. தம் சின்னஞ் சிறு வீட்டில் கவனிப்பாரற்று அநாதையாகக் காலம் தள்ள வேண்டிய நிலைமை வந்தது.

''மகனே, தர்மராஜா! உன்னைக் காயப்படுத்தி வீட்டை விட்டு ஓடச் செய்தேனே, பாவி நான். நீ சொன்னவாக்கு அப்படியே பலித்துவிட்டதே! எத்தனை ஏழை ஜனங்கள் மனம் உடையச் செய்தேன்? இனி நான் சாகுமுன் உன்னை என் கண்ணால் ஒரு முறை பார்க்கவேண்டும். உன்னிடம் என் மனப் பூர்வமான மன்னிப்பைக் கோரவேண்டும். அப்புறம் நிம்மதியாகக் கண்ணை மூடுகிறேன்'' என வாய்விட்டுப் புலம்பினார் செட்டியார்.

அதே நிமிஷம் வாசலில் வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது. பெரிய பையனாக வளர்ந்துவிட்ட தர்மராஜன் வைரமுடிச் செட்டியாருடன் வந்து சேர்ந்தான்.

தகப்பனின் அவல நிலைபற்றிக் கேள்வியுற்ற அந்த உத்தம புத்திரன் க்ஷணமும் தாமதியாது ஓடி வந்திருந்தான்.

இவர்களது சந்திப்பைக் கண்டு புன்முறுவல் பூத்து நின்றார் வினை தீர்த்தான் செட்டியார். இன்னும் கணக்கில்லாத துன்பம் அநுபவித்திருக்க வேண்டிய குப்பன் செட்டியார் ஓர் உத்தம புத்திரனைப் பெற்றுவிட்ட புண்ணியத்தினால் தான் தப்பினாரென அவருக்குத் தோன்றியது.

அப்பா: (இருவருடைய பரீட்சை பேப்பர்களையும் பார்த்து விட்டு) டேய் மக்கு, என்னடா இது: கோண்டுவைப் பார்த்து ஒன்று விடாமல் அப்படியே காப்பியடித்திருக்கிறாயே!

மகன்: எங்க வாத்தியார்தானப்பா, 'செய்வன திருந்தச் செய்!' என்று சொல்லிக் கொடுத்தார்.

—**அ. ஐயாக்கண்ணு.**

பிசாசு

'நடனு'

"அம்மா பிசாசு! பிசாசு!" என்ற சப்தம் வீறிட்டுக் கிளம்பியது. அடுக்களையில் சமையல் வேலையில் ஈடுபட் டிருந்த அம்மா வேகமாக ஹாலுக்கு வந்தாள்.

"ஏண்டா, என்னைப் பார்த்தால் பிசாசு மாதிரியா இருக்கு?" என்று கேட்டுக்கொண்டே வந்தவள், கணபதி ஓடிவருவதைக் கண்டதும், நின்றுவிட்டாள். தலை தெறிக்க ஓடி வந்த கணபதி அம்மாவை இறுகக் கட்டிக்கொண்டான். "என்னடா கண்ணே!" என்று அவனை அப்படியே அணைத்துக் கொண்டாள் அம்மா.

கணபதி வீறிட்டுக் கதறிக்கொண் டிருந்தான். அவன் கைகால்களெல்லாம் 'வெட வெட' வென்று நடுங்கின. "அம்மா பிசாசு! .... அப்பா பிசாசு ... ஐயோ! பயமாயிருக்கே! என்னை ஓங்கி அறைஞ்சுட்டுதே ..... நான் செத்துப் போயிடுவேனே!" என்று குளறிக் கொட்டி ஓலமிட்டான்.

அம்மா ஒன்றும் புரியாமல் திணறினள். சின்னக் குழந்தையைப் போல் அவனைத் தூக்கிக்கொண்டு போய்க் கட்டிலில் படுக்க வைத்தாள். கையையும் காலையும் பிடித்துவிட்டாள். ஓவல்டினைக் கரைத்துக் கொடுத்தாள் அவன் உடம்பு சுடத் தொடங்கியது. அவன் விடாமல் பிசாசு ஜபம் செய்து கொண்டே யிருந்தான்.

அம்மாவுக்கு விவரம் புரியவில்லை. டாக்டருக்கு ஆள் அனுப்பினள். டாக்டர் வந்து பார்த்தார். "ஜுரமிருக்கிறது. பயந்து கொண்டிருக்கிறன்: வேறொன்றும் இல்லை. இந்த மருந்தைக் கொடுங்கள். சரியாகிவிடும்" என்று சொல்லி விட்டுப் போனர்.

பயந்த காரணமாக இருக்குமோ என்று நினைத்து மந்திரவாதியான கோவில் குருக்களை வரவழைத்தாள் அம்மா. அவர் வெகு நேரம் ஜபம் செய்தார். கண்களை உருட்டி விழித்தார். உடம்பை இப்படியும் அப்படியுமாக ஒரு முறை முறித்துக் கொண்டார். விபூதியை எடுத்துக் கணபதியின் நெற்றியிலும் உடம்

எஜமான்: என்னடா இவ்வளவு சிறிய செடிக்கு இவ்வளவு தண்ணீர் விடுகிருயே, கெட்டு விடாதா?

தோட்டக்காரன்: இல்லே எஜமான். நான் பத்து நாள் லீவில் போகிறேன் அதனுல் இப்பொழுதே சேர்த்து ஊற்றுகிறேன்.

—வி. கிருஷ்ணமூர்த்தி, ஆத்ரேயபுரம்.

பிலும் பூசினர். ''காற்றின் சேஷ்டைதான். கவலேப் படவேண்டாம். நான் வந்து கவனித்துக் கொள்கிறேன்'' என்று கூறிச் சென்றுர்.

கணபதி பிதற்றிக்கொண்டேயிருந்தான். அம்மா பக்கத்தில் இருந்தாள். ''ஏண்டா பிசாசு அறைஞ்சுதுன்னு சொன்னியே, எங்கேடா அறைஞ்சுது?''

''முதுகிலே . . அம்மா . . .'' என்று தேம்பினன் கணபதி.

முதுகு முழுவதும் தடவி அம்மா. சட்டையைத் தூக்கி பார்த்தாள். அடையாளம் ஒன்றும் தென்படவில்லே. அவளுக்குக் குழப்பம்தான் அதிகமாகியது.

''ஏண்டா! பிசாசு பிசாசுன்னு கத்தறியே. ஏதுடா பிசாசு?''

''அதாம்மா அப்பா சொன்ன பிசாசு!'' - சொல்லும்போழுதே நடுங்கினன் அவன்.

''அப்பா சொன்ன பிசாசா? சரியாத்தான் சொல்லேன்.''

''அன்னிக்கு அப்பா சொன்னரே 'என் ஆபீஸ் அறைக்குப் போய் விஷமம் பண்ணுதே. அங்கே ஒரு பிசாசு இருக்கு. என் மேஜைமேல் எதையாவது தொட்டே ஒரே அறையா அறைஞ்சுடும்' னு சொன்னரே, அந்தப் பிசாசேதான் அம்மா'' என்றுன் கணபதி.

''நீ போய் என்ன விஷமம்டா பண்ணினே? எங்கிட்டே அப்பா ஒண்ணும் சொல்லல்லியே . . . .'' இந்தப் பிசாசு விஷயம் புரியவில்லே அவளுக்கு.

''அப்பா மேஜையிருக்கு பாரு, அதுமேலே ஒரு பெரிய கண்ணுடி வெச்சுருக்கே, அதுக்கு ரெண்டு பக்கத்திலேயும் சந்திரன் மாதிரி ரெண்டு விளக்குக்கூட எரியுமே. அதுலேதான் பவுடர், சீப்பு,பேனு எல்லாம் வெச்சுருக்கார். நான் அதுக்குப் பக்கத்திலே உட்கார்ந்து விளேயாடினேன். அந்தக் கண்ணுடிக்குக் கீழே 'டிராய'ரோடே ஒரு குட்டி மேஜையிருக்கே அது பளபளன்னு இருக்கு. அதை அப்படித் தடவிப் பார்த்தேன். அப்போ பின் பக்கமா யாரோ நின்னுண்டு 'பளார்'னு முதுகிலே அறைஞ்ச

மாதிரி யிருந்தது. அப்படியே வலி பிராணன் போயிடுத்து. அப்பா தான்னு நினைச்சுத் திரும்பிப் பார்த்தேன். ஒத்தரையுமே காணும். அது அப்பா சொன்ன பிசாசு இல்லாமெ வேறே என்னவாம்?'' அந்த அறை ஞாபகம் வரவே உடம்பு நடுங்க முதுகைத் தடவிக்கொண்டான் கணபதி.

இதை அரைகுறையாகக் கேட்டுக்கொண்டே வந்து நுழைந்தார் அப்பா. ''ஆபீஸ் ரூமிலே விஷமம் பண்ணினாயா? நான்தான் அங்கே விஷமத்துக்குப் போகாதே என்று சொன்னேனே. அறை வாங்கிண்டயா? வேணும்; வேணும்'' என்று கூறிக்கொண்டே சாவதானமாகச் சட்டையைக் கழற்றினார் அப்பா.

''குழந்தை பிசாசு அடிச்சுட்டுதுன்னு பயத்திலே சாகிறான். ஜுரம் அடிக்கிறது; அமர்க்களப் படுத்துகிறான்: நீங்க என்னடான்னா . .'' அதற்கு மேல் பேச்சு எழாமல் அழத் தொடங்கினாள் அம்மா.

''போகாதேன்னு சொன்னேனே, ஏன் போனான் அந்தப் பயல்? . . .'' என்று சொல்லிக்கொண்டே திரும்பியவர் அம்மாவின் அழுகையைப் பார்த்ததும் நிறுத்தினார்.

''அடி, அசடே! பேயுமில்லை, பிசாசுமில்லை. கண்ணாடி செட்டு ஸ்டூலாலே செஞ்சது. ரெண்டு பக்கத்து விளக்குகளுக்கும் வயரிலே கரண்ட் லீக் ஆகிறது. அதைத் தொட்டா 'பளிச்' சென்று 'ஷாக்' அடிக்கும். அதைச் சொன்னா உன் பிள்ளை புரியாமல் போய் விஷமம் செய்யப் போகிறானேன்னு 'பிசாசு இருக்குடா'ன்னு சொன்னேன். அதைத் தொட்டிருக்கான். 'ஷாக்' அடிச்சிருக்கு. பிசாசுன்னு நினைச்சுட்டான். என் மேலேதான் தப்பு! நான் குழந்தையிடம் விளக்கி விவரமாச் சொல்லியிருக்கணும்'' என்றார் அப்பா.

''அப்போ என்னை அறைஞ்சது நிஜமாப் பிசாசு இல்லையாப்பா கரண்ட்தானா?'' என்று மெதுவா எழுந்து உட்கார்ந்தான் கணபதி

மறுநாளே கணபதியின் ஜுரம் தணிந்துவிட்டது.

குணக் குன்று

எஸ். கே. ராவ்

ராவணனுடைய சகோதரன் கும்பகர்ணன். இவன் ஒரு குணக்குன்று என்று சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ராட்சஸன், அதிலும் ராவணேசுவரனுடைய சகோதரன், ராம லக்ஷ்மணர்களோடு மூர்க்கமாகப் போரிட்டவன், இவனா குணக்குன்று என்று தோன்றலாம். பெரிய தூங்குமூஞ்சி, மலை போன்ற உருவம் படைத்தவன் என்றெல்லாம்தான் அவனைப்பற்றி நமக்கு நினைவு வருகிறது. ஆனால் தெய்வ பக்தி, சகோதர வாஞ்சை, தேசாபிமானம் முதலிய நற் குணங்கள் படைத்த நீதிமான், மகாவீரன் கும்பகர்ணன் என்பது எல்லாம் நமக்கு அவ்வளவாக நினைவுக்கு வருவதில்லை.

அதிகமாகத் தூங்குகிறவர்களைக் கண்டால், ''கும்பகர்ணன் மாதிரித் தூங்குகிறானே!'' என்று நாம் சொல்கிறோம். கும்பகர்ணனுக்குத் தூங்குவது என்றால் மிகவும் ஆசை; எப்போதும் தூக்கம்தான்.

சீதையைச் சிறைப் பிடித்து வைத்திருந்தான் ராவணன். ராமர் இதைத் தெரிந்துகொண்டு இலங்கைக்கு வந்து சேருகிறார். போர் மூள்கிறது. முதல் நாள் போரில் தோல்வியுற்றுத் திரும்பினான் ராவணன். மகோதரன் என்ற அரக்கன் அப்போது ராவணனைப் பார்த்து, ''ராவணா! உன்னை யாராலும் வெல்ல முடியாது என்பது நிச்சயம். இப்பொழுது உன் சகோதரன் கும்பகர்ணனை அழைத்துப் போருக்கு அனுப்புவாம். எதிரிகள் அவனுடைய மலை போன்ற தோற்றத்தைப் பார்த்து ஓடியே போய்விடுவார்கள்'' என்றான்.

ராவணன் உடனே கும்பகர்ணனை அழைத்துவர ஆட்களை ஏவினான். முதலில் நாலு அரக்கர்கள் போனார்கள். கும்பகர்ணன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். அவர்கள் தட்டி எழுப்பினார்கள். கும்பகர்ணன் தூக்கம் அதிகமாயிற்றே தவிர, வேறு பலன் ஏற்படவில்லை. அவர்கள் திரும்பி விட்டார்கள். இதற்குப் பிறகு ராவணன் யானைகளையும் சிங்கங்களையும் விட்டு அவன்மீது ஏறி மிதித்து எழுப்பும்படி சொன்னான். அப்படியே அந்தக் கொடிய விலங்குகள் போய்க் கும்பகர்ணனை மிதித்தன. ஆகா, என்ன சுகம், என்ன சுகம்! உடம்பு வலிக்கு இதமாக யாராவது மிதித்து விட்டால் எப்படியிருக்கும்? அப்படியிருந்தது அவனுக்கு. மெய்ம் மறந்து தூங்கிய கும்பகர்ணன் குறட்டையேவிட ஆரம்பித்து

விட்டான். அப்புறம் என்ன செய்கிறது? அவனை எழுப்ப ஒரு பெரிய அரக்கர் சேனையே வந்தது. அவன் தூங்கும் மாளிகையின் கதவைத் திறந்ததுமே ஒரு பெரிய புயலில் சிக்கிக்கொண்டதைப்போல அந்தச் சைன்னியம் தடுமாறியது. கும்பகர்ணன் குறட்டை, சூருவளிமாதிரி இருந்தது. மூச்சை இழுக்கும்போது சேனைவீரர்கள் அத்தனை பேரும் உள்ளே இழுபட்டார்கள்.

மூச்சு வெளி வரும்போது அத்தனை பேரும் வெளியே போய் விழுந்தார்கள். உள்ளேயும் வெளியிலேயுமாக எத்தனை நேரம் போராட முடியும்? அவர்கள் இவ்விதம் திகைத்துப் போய் ஒருவர் கையை ஒருவர் கோத்துக்கொண்டு மெதுவாக உள்ளே நுழைந்து, தாரை, தப்பட்டை முதலியவைகளைக் காதருகில் அடித்துச் சத்தப்படுத்தினார்கள். சம்மட்டியால் தாடையிலும் மார்பிலும் அடித்து இழுத்தார்கள். ஊஹும்; கும்பகர்ணன் அசையவே யில்லை. பின்னர் ஒரு குதிரைப் படை வந்தது. குதிரைகள்தான் களைத்தனவே தவிர கும்பகர்ணன் எழுந்தபாடில்லை. அவர்களோடு இன்னும் ஆயிரம் அரக்கர்களைச் சேர்த்து அனுப்பினான் ராவணன். அவர்கள் போய் உலக்கைகளால் அவன் கன்னத்தை இடித்து, சூலாயுதம் கொண்டு குத்தினார்கள். கும்பகர்ணன் மெதுவாக இப்போது அசைந்து கொடுத்தான். ''உன் அண்ணன் ராவணன் அழைக்கிறான்!'' என்று எல்லாரும் ஒரு குரலில் கூவினார்கள். அண்ணன் பெயரைக் கேட்டானோ இல்லையோ, கும்பகர்ணன் தூக்கம் தெளிந்துவிட்டது. வாரிச் சுருட்டிக்கொண்டு மலைபோல் எழுந்து உட்கார்ந்தான். விழித்து எழுந்த கும்பகர்ணனுக்குச் சரியான பசி. அறுநூறு வண்டிச் சாதம் காய் கறி வகைகளுடன் சமைத்துத் தயாராக இருந்தது. அப்படியே ஒரு கை பார்த்த அப்புறம் தாக சாந்தி பண்ணிக்கொள்ள வே

டாமா? நூற்றுக்கணக்கான கள்ளுக் குடங்கள் உள்ளே போயின. அப்படியும் பசி தீர வில்லை. ஆயிரம் எருமைக் கடாக் களை ஓர் இழுப்பு இழுத்ததும்தான் பசி ஒருவாறு அடங்கிற்று அவ னுக்கு. மகா பாரதத்தில் பகா சுரன் என்ற அரக்கனைக் கொன்றானே பீமன், அவனைவிட இவன் பன்மடங்கு பலசாலி என்று தெரிகிறது. ஒரு தோள் முதல் மற்றொரு தோள் வரையில் வைத்த கண் எடுக்காமல் தொடர்ந்து பார்த்துக்கொண்டே போனால் பல நாட்கள் செல்லு மாம் பார்த்து முடிய. அப்படி என்றால் அவனுடைய உருவம் எத்தனை பெரியது என்று கற்பனை செய்து பாருங்கள்.

இவன் யுத்தத்துக்கு வருவதைப் பார்த்த ராமரே, ''இந்தப் பிரம் மாண்டமான மனிதன் கால்களை யுடைய ஒரு மலையோ?'' என்று வியப்படைந்து போனாராம்!

ம கும்பகர்ணன் நூற்றுக்கணக்கில் வண்டி வண்டியாகத் தின்று, குடம் குடமாகக் கள்ளைக் குடித்து விட்டுச் சதா காலமும் உறங்கினா லும் அவன் வெறும் சாப்பாட்டுச் சாமி அல்ல; சோம்பேறியும் அல்ல. இது அவனுடைய போரின் போது நன்றாகத் தெரிகிறது.

தூங்கி விழித்து, பசி தீர உண்ட பின் வந்த கும்பகர்ணன் அண்ணன் காலில் விழுந்து வணங்கினான். ராவணனோ தம்பியிடம் மிகவும் அன்பு வைத்திருந்தான். அவன் தம்பியை அப்படியே ஆரத் தழுவி, அவனுக்குப் பட்டாடைகள் அணி வித்து, மீண்டும் ஆகாரங்கள் கொடுத்து உபசாரம் செய்து நெற்றியில் வீரப் பதக்கம் சூட்டினான். அந்தப் பதக்கம் தேவேந்திரனுடைய ஐராவதம் என்ற யானையின் நெற்றியிலிருந்து விழுந்த பதக்கம். தேவேந்திரன் ஒரு சமயம் ராவணனிடம் தோற்று ஓடியபோது கிடைத்தது அது. அதையே தோல்விக்கு அறிகுறி யாக இப்பொழுதும் சூட்ட நேர்ந் தது போலிருக்கிறது!

கும்பகர்ணனுக்கு அண்ணனிடம் எவ்வளவு பக்தியும் அன்பும் உண்டோ அவ்வளவு தர்மத்திலும் நியாயத்திலும் பக்தியிருந்தது. ''அண்ணா, வேண்டாம். சீதையை அனுப்பிவிடு! யுத்தம் வேண் டாம்!'' என்று எவ்வளவோ மன்றாடிப் பார்த்துவிட்டான். அண்ணன் கேட்கிற வழியாக இல்லை. இப்பொழுதாவது ஒரு வார்த்தை கடைசியாகச் சொல் லிப் பார்ப்போம் என்று அண்ண னைப் பார்த்து, ''அண்ணா! எந்தப் பக்கத்தில் தர்மம் இருக்கிறதோ அந்தப் பக்கமே ஜயிக்கும். நம்மிடம் தர்மமில்லை. எனவே நான் சொல்வதைக் கேள். ராம னுடைய மன்னிப்பை இப்பொழு தும் பெற முடியும்!'' என்றான்.

ராவணனுக்கு இதைக் கேட்ட தும் கோபம் பொங்கி எழுந்தது. ''உனக்குத் தூங்கத்தான் தெரி யும். போ, போய்த் தூங்கு!'' என்று கோபித்துக்கொண்டு, தானே யுத்தம் செய்யப் புறப்பட் டான். உடனே கும்பகர்ணன் அண்ணனை மறித்து, ''அண்ணா! நான் சாவுக்கு அஞ்சவில்லை. ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லி விடுகிறேன். நான் போரில் இறப் பது நிச்சயம். நான் அப்படிச் செத்த பின்பாவது உனக்கு நல்ல புத்தி ஏற்பட வேண்டும் என்பதே என் கடைசிப் பிரார்த்தனை. என்னிடம் குற்றமிருந்தால் மன் னித்துவிடு!'' என்று கல்லும் கரைந்து உருகும்படி சொல்லி விட்டு யுத்தத்துக்குப் புறப்பட் டான். தன்னிடம் உயிருக்கும் மேலான அன்பு கும்பகர்ணனுக்கு உண்டு என்பதை ராவணன் உணர்ந்தான். அவன் கண்களில் கண்ணீர் கசிந்தது. சகோதர வாஞ்சைக்கு இதைவிடச் சிறந்த உதாரணம் வேண்டுமா?

போர்க்களத்துக்கு வந்து விட்டான் கும்பகர்ணன். அவனுக் குத் தம்பிதானே விபீஷணன்! அவன் போய் அண்ணனை வணங்கி நின்றான். கும்பகர்ணன் தம்பியை மார்புடன் அணைத்துக்கொண்டு, ''தம்பி, நாங்கள் எல்லாரும் இறக்கப்போவது நிச்சயம். நீயா

வது எங்களுக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செய்து எங்களுக்கு நற்கதி கிடைக்கும்படி செய்வாய் என்று எண்ணியிருந்தேன். தர்மமே உருவெடுத்து வந்தது போன்ற ராமனை விட்டு நீ ஏன் வந்தாய்? உடனே திரும்பிப் போய்விடு!'' என்றான்.

விபீஷணன் வந்த காரியம் வேறு. மெதுவாகக் கும்பகர்ணனைத் தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டால் ராவணனைத் தோற்கடித்து விடலாம் என்று அவன் எண்ணினான். ''அண்ணா, தீச்செயல் செய்யும் ஒருவர் தந்தையானாலும் தாயானாலும் சகோதரனேயானாலும் தர்மம் தெரிந்தவர்கள் அவர்களை உறவினர்களாகக் கருதமாட்டார்கள். நம் அண்ணன் ராவணனே தீயவழியில் போகிறான். நாம் அவனை விட்டு ராமன் பக்கத்தில் சேர்வதே சிறந்தது. அது பழிச் சொல்லுக்கும் இடமாகாது'' என்றான்.

இதைக் கேட்டதும் கும்பகர்ணன் கண்களில் நீர் பெருகியது. ''தம்பி! என்னை இவ்வளவு காலமும் வளர்த்து, தனக்காகப் போரிட என்னை நம்பிப் போர்க்களத்துக்கு அனுப்பியிருக்கிறான் ராவணன். அவனுக்காக என் உயிரைக் கொடுத்து போராடுவேனே தவிர அவனை விட்டு உயிரின்மேல் ஆசைவைத்து ராமன் பக்கம் வரமாட்டேன். அதனால் என் மனசு துன்பம்தான் அடையும். நம்பிக்கைத் துரோகம் செய்ய என்னால் முடியாது. நீ ராமனிடம் திரும்பிப் போய்விடு. நீ தர்ம மார்க்கத்தைச் சேர்ந்தவன். சிரஞ்சீவியாகப் புகழோடு இருக்கும்படி உன்னை வாழ்த்துகிறேன்'' என்று விபீஷணனை அனுப்பிவிட்டான் கும்பகர்ணன்.

கும்பகர்ணன் அனைவரும் பிரமித்துப் போகும்படி போர் செய்தான். அவனை எதிர்த்து நீலன், அங்கதன் முதலானோர் சண்டையிட்டார்கள். அநுமாரும் மலைகளைப் பிடுங்கி அவன்மேல் விட்டெறிந்து பார்த்தார். கும்பகர்ணன் அசையவில்லை. மலைகள்தான் சுக்கல் சுக்கலாகப் பொடியாயின.

அவனுடைய சேனை முழுதும் அழிந்துபோய் கும்பகர்ணன் மட்டும் போர்க்களத்தில் எஞ்சி நின்றான். ராமன் அவனைப் பார்த்து, ''அப்பா கும்பகர்ணா, நீ தனியாக நிற்கிறாய். உன்னைக் கொல்ல நான் விரும்பவில்லை. நீ திரும்பிப் போகலாம். அப்படிப் போக நீ விரும்பாவிட்டால் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு பிறகு வரலாம்'' என்றான் கருணையோடு. ஆனால் கும்பகர்ணனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்னை ஒரு வீரனாக நீ மதித்தால் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருப்பாயா? என்னையா புறமுதுகு காட்டிப் போகச் சொல்கிறாய்? அந்த இழி செயலை நான் செய்யமாட்டேன்'' என்று கைகால்கள் துண்டிக்கப்படும் வரையில் மூர்க்கமாகப் போரிட்டான். முண்டமாக நின்ற பிறகுங்கூட அவன் எதிரிகள் எறிந்த மலைகளைத் தூசிபோல ஊதி எறிந்தான். எந்த விதத்தில் தன் சகோதரனாகிய ராவணனுக்கு உதவி செய்ய முடியும் என்பதே கடைசிவரையில் அவனுடைய நோக்கமாக இருந்தது. முடிவாக அண்ணனைக் காப்பாற்றத் தன்னால் ஆகாது என்று கண்டபின் எதிரியின் திறமையைச் சுத்த வீரனாகிய கும்பகர்ணன் மெச்சிவிட்டு உயிர் விட்டான். சாகும் தறுவாயில் அவனுடைய முண்டமான உடலையும் பின்னமான முகத்தையும் ஒருவரும் காணாமல் சமுத்திரத்தில் போட்டு விட்டு வரும்படி மட்டும் கேட்டுக் கொண்டான்.

ராமன் அவனுடைய ஒரே வேண்டுகோளை நிராகரிக்கவில்லை. ''கும்பகர்ணன் குணக்குன்று; மகா வீரன்!'' என்றே ராமன் கொண்டாடினான். நாமும் அதை நினைவில் வைத்துக்கொள்வோம்.

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

ஆர். பெருமாள், அன்பில்.

'பாஸிடிவ்', 'நெகடிவ்' என்ற இரண்டில் ஏதேனும் ஒன்று இல்லாமல் மின்சார விளக்குகள் எரியுமா?

ஒரு மின்சார விளக்கைப் (விளக்கின் குமிழைப்) பார்த்தால், அதில் மெல்லிய கம்பி இருப்பது தெரியும். அந்தக் கம்பியின் வழியாக மின்சார ஓட்டம் தொடர்ச்சியாக நிகழுமானல், அப்போது அந்த விளக்கு ஒளிவீசும். மின்சார ஓட்டம் விளக்குக் கம்பியின் ஒரு கோடியில் நுழைந்து, விளக்கின் உள் வழியாகச் சென்று, கம்பியின் மறு கோடியின் வழியாக வெளியே செல்லும். இந்த இரண்டு கோடிகளுக்கு. பாஸிடிவ் கோடி என்றும், நெகெடிவ் கோடி என்றும் பெயர்.

ஆகையால் ஒரு விளக்கு ஒளிவீச வேண்டுமானல், அதில் பாஸிடிவ், நெகடிவ் என்னும் இரண்டு கோடிகளும் இருந்தாக வேண்டும். அதாவது, கம்பி ஒரு கோடியிலிருந்து தொடங்கி, மறு கோடி வரை விட்டுப் போகாமல் தொடர்ச்சியாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் மின்சாரம் விளக்குக்குள் ஓடி, அங்குள்ள கம்பியை ஒளிவீசச் செய்து வெளியே வர முடியும். கம்பி விட்டுப்போனல் மின்சார ஓட்டம் நிகழ முடியாது. அதனல் விளக்கு ஒளிவீசாது—அதாவது எரியாது.

வி. ஆர். நடராஜன், விஸ்லியநல்லூர்.

சூரிய ஒளியால் பூமி உஷ்ணப்படுகிறது. ஆனல் சந்திரனுடைய ஒளியால் உஷ்ணப்படுவதில்லை. இது ஏன்?

பூமியின் மீது நேரடியாக உறைக்கும் சூரிய கிரணங்கள் வெப்ப சக்தியையும், ஒளிச்சக்தியையும் சுமந்து வருகின்றன. அந்தக் கிரணங்களில் உள்ள வெப்ப சக்தியே பூமியை வெப்பமுறச் செய்கிறது.

சூரியனுடைய கிரணங்கள் (வெப்ப சக்தியையும், ஒளிச் சக்தியையும் உடைய கிரணங்கள்) சந்திரனின் மேற் பரப்பின் மீதும் உறைக்கின்றன. அவை சந்திரனிலிருந்து பிரதிபலித்து நம்மை வந்து அடைகின்றன. ஆதலால் தான் சந்திரன் பிரகாசமாகத் தோன்றுகிறது. நிலவைப் பொழிகிறது.

ஆனல் சந்திரனின் மேற்பரப்பானது கண்ணுடியைப் போல் அதன்மீது படும் ஒளியில் பெரும் பான்மையைப் பிரதிபலிப்பதில்லை. ஆகையால்தான் நிலவு வெயிலை விட ஒளி குறைவாக இருக்கிறது.

சந்திரன் குளிர்ந்துபோன உலகம். அதன் மேற்பரப்பு மிகவும் சில்லென்று இருக்கும். ஆகையால் அதன் மீது படும் சூரிய கிரணங்களின் வெப்பத்தின் பெரும்பகுதி சந்திரனல் உட்கிரகிக்கப் படுகிறது. மிகச் சிறிதே பிரதிபலிக்கப்பட்டு நம்மை வந்து அடைகிறது. ஆகையால்தான் சந்திரனின் கிரணங்கள் வெப்பமுடையனவாக இருப்பதில்லை.

மா. முருகதாசன், மதுரை.

வானத்தில் மின்னல் ஒளியுடன் விழும் இடியானது மாட்டுச் சாணத்தின் மீது விழுந்தால் அது தங்கக் கட்டியாக மாறிவிடுமாமே, உண்மையா?

மாறுது. இது ஒரு குருட்டு நம்பிக்கை.

எஸ். ஏ. நருல், கீழக்கரை.

பசுவின் பாலைக் காய்ச்சிக் குடிப்பது அவசியமா?

பசுவின் பால் சத்தான உணவு. அதைப் பச்சையாகத்தான் அதன்

கன்றுக்குட்டி குடிக்கிறது. ஆனால், நமக்குக் கிடைக்கும் பசுவின் பால் எப்பொழுதும் தூய்மையாக இருப்பதில்லை. பசுவுக்கு நோய் ஏதாவது இருக்கலாம். பால் கறக்கும் பாத்திரங்களிலோ, பாலைக் கறப்பவன் கையிலோ அசுத்தம் இருக்கலாம். இவற்றால் நோய் உண்டாகலாம்.

பாலைக் காய்ச்சிவிட்டால் இந்த நோய்க் கிருமிகள் எல்லாம் அநேகமாக அழிந்துபோகின்றன. ஆனால் பாலைக் காய்ச்சும்போது அதிலுள்ள சில வைட்டமின்கள் அழிந்துபோகின்றன. ஆயினும் இந்த நஷ்டத்தைவிட பாலைத் தூய்மையாக்குவதால் கிடைக்கும் லாபமே அதிகம்.

ஆகையால், மொத்தத்தில் பார்த்தால் பாலைக் காய்ச்சிக் குடிப்பதுதான் நல்லது.

எஸ். ஏ. ஹமீது அப்துல் காதர், கீழக்கரை.

நீராவி எஞ்சினுக்கும் உள்ளிட தகன எஞ்சினுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

இரண்டு வகை எஞ்ஜின்களிலும் எரி-பொருளின் (Fuel) ரசாயன சக்தி (Chemical energy) முதன் முதலில் வெப்ப சக்தியாக (Heat energy) மாற்றப்படுகிறது. இப்படி நிகழும் காரியத்தையே நாம் தகனம் (Combustion) என்று சொல்லுகிறோம். அடுத்தபடியாக இந்த வெப்ப சக்தி இயந்திர சக்தியாக (Mechanical energy) மாற்றப்படுகிறது. இயங்கும் பிஸ்டனின் (Piston) சக்தியையே நாம் இயந்திர சக்தி என்று குறிப்பிடுகிறோம்.

நீராவி-எஞ்ஜினில் (Steam-engine) ரசாயன சக்தி வெப்ப சக்தியாக எஞ்ஜினின் ஒரு தனிப் பகுதியில் மாற்றப்படுகிறது. இந்த இடம் பிஸ்டன் இயங்கும் சிலிண்டருக்கு வெளியே உள்ளது. ஆகையால் இதை வெளி-தகன எஞ்ஜின் என்று சொல்லுகிறோம்.

அகதகன எஞ்சின்களில் (Internal Combustion Engine) ரசாயன சக்தி வெப்ப சக்தியாக மாறும் செயல் ஒரு சிலிண்டருக்கு உள்ளேயே—உட்புறத்திலேயே நிகழ்கிறது. ஆகையால், இவ்வகை எஞ்ஜினுக்கு அகதகன எஞ்ஜின் என்று பெயர்.

இதுதான் இவ்விரண்டு வகையான எஞ்ஜின்களுக்கும் உள்ள முக்கிய வித்தியாசம்.

எஸ். ஏ. மனோகரன், பி.ஏ.,பி,டி., ஈரோடு.

ஒரு கல்லை மேலே போட்டால் கீழே விழுகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்திலே அதாவது பூமியினுடைய ஆகர்ஷண சக்தியும் மற்றக் கிரகங்களுடைய ஆகர்ஷண சக்தியும் சந்திக்குமிடத்தில் ஒரு பொருளை வைத்தால், அது எந்த இடத்திற்கும் செல்லாதா?

சூரியமண்டலத்தின் ஏதோ ஓர் இடத்தில் ஒரு பொருள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தப்பொருளின்மீது ஒரு குறிப்பிட்ட கணத்தில் பூமியாலும் மற்றக் கிரகங்களாலும் செலுத்தப்படும் சக்திகள் எல்லாம் ஒன்றை ஒன்று சமன்செய்கின்றன என்றும் வைத்துக்கொள்ளுவோம். அப்படி ஒரு நிலை இருக்குமானால், அந்தப் பொருளானது சூரிய மண்டலத்தில் சமநிலையில் (Equilibrium) இருக்கும்.

ஆனால், சூரியமண்டலம் முழுதுமே வான வெளியில் ஓயாமல் ஹெர்க்குலீஸ் (Hercules) என்னும் நட்சத்திர கணத்தை (Constellation) நோக்கி வேகமாக ஓடிக்கொண்டே இருக்கிறது என்று வானசாஸ்திரிகள் கண்டுபிடித்து நிரூபித்திருக்கிறார்கள். ஆகையால், அந்தப் பொருளானது ஓரிடத்தில் நிலையாக இருக்குமானால், சூரிய மண்டலம் எங்கே செல்கிறதோ, அங்கே அதனோடு கூட இழுத்துச் செல்லப்படுகிறது.

சூரிய மண்டலத்துக்கு உள்ளே அந்தப் பொருளின் நிலையைக் கவனிக்கப் போனால், அப்பொழுதும் ஒரு கணப்பொழுதுக்கு மேல் அப்படிப்பட்ட பொருளால் ஓரிடத்தில் தங்கியிருக்க முடியாது என்று சொல்லலாம்; அந்தப் பொருள் இருக்கும் இடத்திலிருந்து கிரகங்கள் உள்ள தூரங்கள் கணத்துக்குக்

கணம் ஓயாமல் மாறிக்கொண்டேயிருக்கும். ஏனென்றால், கிரகங்கள் எல்லாம் வெவ்வேறு வேகங்களோடு வெவ்வேறு அயனவீதிகளில் (Orbits) சூரியனைச் சுற்றி ஓடிக்கொண்டேயிருக்கிறன. இந்த அயனவீதிகளின் தளங்களும் (Planes) சிறிதோ பெரிதோ மாறுபடுகின்றன. ஆகையால், அந்தக் கிரகங்களும் அந்தப் பொருளின் மீது செலுத்திவரும் சக்திகளும் கணத்துக்குக் கணம் மாறிக் கொண்டேயிருக்கும். ஆகவே, ஒரு சமநிலை ஏற்பட்டாலும்கூட மறுகணம் அந்தச் சமநிலை மாறிவிடும்.

இன்னும் ஒன்று. நாம் தொடங்கும்போது சூரியனும் ஒன்பது கிரகங்களும் ஒரு பொருளின்மீது செலுத்தும் சக்திகள் எல்லாம் அப்பொருளைச் சமநிலையில் இருக்கச் செய்யக்கூடிய புள்ளி ஒன்றில் சமமாக இருப்பதாகப் பாவித்துக் கொண்டோம். ஆனால், ஓயாமல் இயங்கிக்கொண்டே யிருக்கும் 9 அல்லது 10 பொருள்களால் சமகாலத்தில் செலுத்தப்படும் சக்திகள் சமநிலையை அடைந்திருக்கும் புள்ளியைக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியம். இதுவரையில் அப்பேற்பட்ட புள்ளியைப் பெரிய கணித நிபுணர்களாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

எம். ஆர். வேங்கடராமன்,
அமைந்தகரை.

மின்சாரக் கம்பிகளின்மீது உட்காரும் பறவைகள் இறப்பதில்லையே. ஏன்?

மின்சார ஓட்டம் ஒரு கம்பியில் ஓடும்போது அதில் ஒரு பறவை உட்கார்ந்திருப்பதைக் கவனியுங்கள். அப்போது அந்தக் கம்பியின் மீது பறவையின் கால்கள் இரண்டும் கிட்டக் கிட்ட இருக்கின்றன; அதாவது அவை கம்பியில் படும் புள்ளிகளுக்கு இடையே உள்ள தூரம் அதிகம் இல்லை. ஆகையால் அவ்விரண்டு புள்ளிகளுக்கும் இடையே உள்ள மின்சார அழுத்தம் மிகக் குறைவாகவே இருக்கும். (நீர் ஓட்டம் நிகழ்வதற்கு இரண்டு இடங்களுக்கு இடையே உள்ள உயர வித்தியாசத்தால் ஏற்படும் அழுத்தமே காரணம் என்பது உங்களுக்குத் தெரியும். அதுபோலவே மின்சார ஓட்டம் நிகழ்வதற்கு இரண்டு இடங்களுக்கு இடையே உள்ள மின்சார அழுத்த வித்தியாசமே காரணம்.)

மேலும், பறவைகளின் உள்ளங்காலில் உள்ள பொருள் அதிக மின்-தடை (Eleetrical Resistance) உள்ள பொருள்.

இந்த இரண்டு காரணங்களாலும் பறவை கம்பியின் மீது உட்கார்ந்திருக்கும்போது அதன் உடலின் வழியாக மிக மிகக் குறைந்த அளவிலேயே மின்சார ஓட்டம் நிகழும். ஆகையால் அப்போது பறவைக்கு யாதொரு கெடுதியும் ஏற்படுவதில்லை.

ஆனால் ஒற்றைக் கம்பியில் உட்கார்ந்து உல்லாசமாக ஊசலாடிப் பாடும் பறவையின் இறகோ அல்லது வாலோ தப்பித் தவறி அருகிலுள்ள இன்னொரு கம்பியின்மீது பட நேர்ந்தால், அந்தப் பறவையின் உடல் ஈரமாக இருந்தால் பறவை சாவது உறுதி.

இதற்குக் காரணம் என்னவென்றால், மின்சாரக் கம்பங்களில் கட்டப்பட்டிருக்கும் இரண்டு கம்பிகளுக்கு இடையே உள்ள மின்-அழுத்தம் மிக அதிகமாக இருக்கும். ஒரு கம்பியின்மீது பட நேருமானால், மிகவும் பலமான மின்சார ஓட்டம் பறவையின் உடலின் ஊடாக நேரக்கூடும். அப்படி நேர்ந்தால், பறவை மின்-அதிர்ச்சி பெற்று இறந்துபோகும்.

மின்-கம்பங்களில் கம்பிகளைத் தாங்குவதற்காக வைத்திருக்கும் குறுக்குச் சட்டத்தில் பறவைகள் உட்கார நேர்ந்தால், இவ்வகையான அபாயம் அதிகம். ஆகையால், 'பறவைக் காப்புகள்' (Bird Guards) என்னும் ஏற்பாடுகள் குறுக்குச் சட்டங்களில் வைக்கப்பட்டிருக்கும். இவைகள் காப்புப் பொருள்களால் அமைந்தவை. மின்சார ஓட்டம் குறுக்கு வழியில் சென்று அபாயம் ஏற்படாமல் இருப்பதற்காக இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

K. 507. குலாப்ஜான்., பாலப்பட்டி, 508. கிருஷ்ணவேணி., சுந்தர்ராஜ் P., பூசலாவா, இலங்கை. 509. குமாரலிங்கம் R., காஞ்சிபுரம். 510. கைலாசநாதன் M. S., ராஜகுமார் T., பண்ருட்டி. 511. கிருஷ்ணன் N., கீழக்கரை. 512. கண்ணப்பன் M., ஹாஸ்பேட். 513. குமாரசாமி A. R., புதுப்பாளையம். 514. கிருஷ்ணன் R., சிவகங்கை. 515. கார்த்திகேயன் K., மதுரை. 516. கண்ணன் R., ஜயம் R. R., மதுரை. 517. கஸ்தூரி பாய் B., சென்னை 1. 518. கோகிலம் A., கொழும்பு. 519. கோதண்டராமன் N., மேலூர். 520 கண்ணப்பன் A., மலாயா. 521. காளிமுத்து M., ஜயம்பேட்டை. 522. கந்தசாமி M., சென்னை 4. 523. குமார் R. S., கண்ணன் R., பாளையங்கோட்டை. 524. கிருஷ்ணமூர்த்தி R., மேலூர். 525. காந்தன் B., ஆத்தூர். 526. கண்ணன் K. B., கல்கத்தா. 527. கோமதிநாயகம் V. K., சாத்தூர். 528. குப்புசாமி G. S., தாராபுரம். 529. கிருஷ்ணசாமி V., சூடாமணி V., சென்னை 5. 530. கிருஷ்ணசாமி K., சேலம். 531. கந்தசாமி N., சிங்காநல்லூர். 532. கனகப்பன் K., விழுப்புரம். 533. கமலா T. R., பாலு T. R., திருநெல்வேலி. 534. கல்பகம் R., சென்னை. 535. குமாரசாமி R., கோகுவில், யாழ்பாணம். 536. குப்பன் D., கோபால், ருக்குபாய்., ஐயனுவரம். 537. கந்து V. S., புது டில்லி. 538. கல்யாணசுந்தரம் S., சோழவந்தான். 539. கனகசபாபதி K., மேட்டூர் அணை. 540. குப்புசாமி P. K., பொள்ளாச்சிபட்டி. 541. கந்தவேல் S., கள்ளக்குறிச்சி. 542. கனி A. S., சுபான், அரகண்டநல்லூர். 543. கிருஷ்ணன் G., மதுரை. 544. கலியபெருமாள்., கட்ரான், இலங்கை. 545. கந்தன் C. P., பெண்ணாகரம்.

L. 170. லலிதாம்பாள்., சுன்னுகம். 171. லட்சுமி K.S., களக்காடு. 172. லீலாவதி K., கல்கத்தா 19. 173. லோகநாதன் S., ஆண்டர்ஸன்பேட்டை. 174. லோகநாதன்.

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

பிப், 15-'55 கூபன் செ:

N., கோயில்பட்டி. 178. லக்ஷ்மணராமன் D. P., மதுரை. 176. லட்சுமிநாராயணன் V., புதுக்கோட்டை. 177. லோகாம்பாள் S., (விலாசம் இல்லை). 178. லட்சுமி காந்த் G., கோயம்புத்தூர். 179. லோகநாதன் K., கோயம்புத்தூர். 180. லட்சுமணன் T., நாகநாதபுரம். 181. லட்சுமணன் R., பசுமலை. 182. லட்சுமணன் R., காரமடை. 183. லட்சுமணன்., N., மதுரை. 184. லட்சுமிநாராயணன் S. R. ஸ்ரீரங்கம். 185. லோகநாதன் M., சென்னை. 13. 186. லலிதா V., கஸ்தூரி V., சென்னை 24. 187. லூர்துசாமி R., கொழும்பு 14. 188. லட்சுமிநாராயணன் P. V., சிகந்தராபாத். 189. லட்சுமணன் S. பணகுடி. 190. லலிதா S.,

★★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★★

பெரம்பூர். சென்னை 23. 191. லட்சுமி K., கல்கத்தா 29. 192. லட்சுமி A., அழகிய பாண்டிபுரம். 193. லட்சுமணன் C., திருமலைராயன்பட்டினம்.

M. 300. முனிவேல்., K. C. சந்திரன்., எதிராஜன்., கிருஷ்ணன்., சென்னை 1. 302. மாரிமுத்து., புதுச்சேரி. 303. முரளி L., சென்னை 4. 304. மதிவேல் G. K., பிரஹல்லாதன்., சென்னை 6. 305. முருகன் N., திருச்சி. 306. முருகன் S., புதுடில்லி. 307. மகாதேவன் P. S., சென்னை 4. 308. முத்துகிருஷ்ணன் N., புதுக்கோட்டை. 309. மோகன்ராம்., சங்கரன்கோயில். 310. மானக்சந்த் A. M., மதுராந்தகம். 311. மாணிக்கவாசகம் R., சரோஜா., கோகிலா, திருச்சி. 312. மோகன் V., பலராம் V., சாந்தா V., சென்னை 4. 313. மணி A. V., புதுப்பாக்கம்., சென்னை. 314. மீனாட்சி S., மதுரை. 315. மூர்த்தி N. K., மதுரை. 316 முருகேசன் M., துறையூர். 317. முருகேசன் V., பரங்கிப்பேட்டை. 318 மக்பூல்., ஆலூர்பேட்டை. 319. மோகனவேலு S, சென்னை 21. 320. மகாதேவன் K. V., சென்னை 4 321. முத்தகிருஷ்ணன் T. K., (விலாசம் இல்லை) 322. மீரா H., புது டில்லி. 323 முருகநாதன்., வேலம்பாளையம். 324. முத்து குமாரசாமி T., புதுச்சேரி. 325. மொகைதீன் V. S. S. ரத்தினபுரி. 326. மூர்த்தி S. M, மீனாக்ஷி., சென்னை 17. 327. முத்துசாமி K., தாராபுரம்.

(மீதி அடுத்த இதழில்)

பாலர் கவி அரங்கம்

வானவில்

வானவில்லைப் பார் - தம்பி
வானவில்லைப் பார்!
வானத்திலே வளைவுடனே
வந்திருக்குது பார்!

சிவப்பு, நீலம், மஞ்சள், ஊதா
பச்சை நிறம் சேர்ந்து
களிப்பு கொள்ளச் செய்யு மதைக்
கருத்துடனே பார். (வா)

மழைக்கு முன்னும் பின்னும் தோன்று
மிந்த வானவில்
நடுப்பகலில் தோன்றிடாது
இந்த வானவில்

காலையிலே மேற்கில் தோன்று
மிந்த வானவில்
மாலையிலே கிழக்கில் தோன்று
மிந்த வானவில் (வா)

—ரா. வெங்கடேசன்

சிவராத்திரிப் பாட்டு - நாட்டுப் பாடல்

ஸ்ரீ ஜயந்தி அம்பாரம், சிவராத்திரி அம்பாரம்
ஸ்ரீ கிருஷ்ண ராயருக்கு திருவிளக்கெண்ணெய்
கொடுக்காவிட்டால் நீ பொம்மை
எச்சா வார்த்தால் நீ ஆச்சி
இல்லாவிட்டால் நீ பூச்சி
அவலிடிக்கிற பொரி பொரிக்கிற
அத்தையைக் கண்டா டஸ்ஸு
ஆனைக்காரன் பொண்டாட்டி
ஆட்டுக் குட்டியைப் பெற்றாளாம்
காச்சு வீச்சு என்று கத்தித்தாம்
காலைவாரி எறிஞ்சாளாம்.

உதவியவர்: சி. ரா. வேங்கடராமன்

கதை: ஆர்வி | பாரஸீக ரோஜா | சித்திரம்: ஸாமி

பொழுது புலர்ந்தது......
எங்கே அந்தப் பேரழகி! ஹா, எங்கே அவள்? டேய்! யார் அங்கே?
ஹுஸூர்!
எங்கேடா அந்தப் பெண் மணி? முட்டாளே! என்ன பேந்தப் பேந்த முழிக்கிறாய்?
தெரியவில்லையே, ஹுஸூர்!
தெரியாதா? தெரியாது என்றா சொல்கிறாய்? ஹவ்! ஹா!! ஹா!!
மன்னா! ஓடிப்போய் ஒரு நொடியில் விசாரித்து வருகிறேன்!
மன்னாதி மன்னா! காமர் இளவரசருக்குச் சித்தக் கலக்கம். அல்லா அருள் புரியட்டும்!
ஹா!
மந்திரி! உன் யோசனைகள் பலே பேஷ்! யாரோ ஒரு பெண் வந்தாளாம். காணோமாம். இந்த மாதிரி இப்போது என் அருமை மகனுக்குச் சித்தக் கலக்கம் வந்துவிட்டது. எல்லாம் உன் யோசனையால் வந்த மோசம் இது! இல்லையா?
அரசே! நானே போய்ப் பார்த்து உண்மையை அறிந்து வருகிறேன்!
வாரும் மதி மந்திரியாரே! அந்தப் பெண்ணை அழைத்து வாரும்! நான் அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தடையில்லை. நாளைக்கே எங்கள் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்!
ஹுஸூர்! ஒரு வேளை ஏதாவது... கனவு... கினவு... கண்டீர்களோ?

(தொடரும்)

எங்கள் பகுதி

*காந்த சக்தி

பொங்கல் நன்னளில் புத்தாடை உடுத்தி, கையில் கரும்புடன் முகத்தில் புன்னகை தவழும் காட்சி, அப்பப்பா! கண் கொள்ளாக் காட்சி. காண்பவர் மனத்தைக் கவரச்செய்யும் காந்த சக்தி படைத்தது.

கண்ணன் உறவு படிப்பவர் மனத்தைப் பரவசமடையச் செய்யும் பகுத்தறிவுக் களஞ்சியம். வாசகர்களுக்குப் பொங்கல் வாழ்த்தாகவும் அமைந்துள்ளது.

குழந்தைகளே என்று கொஞ்சும் மொழியில் அழைத்து, அமுதத்தை அள்ளிப் பருகுங்கள் என அறிவிக்கிருர் ஆசிரியர். பற்பல காட்சிகளைப் படங்களோடு விளக்கி, காண்பவர் மனத்தைக் களிப்படையச் செய்கிறது போட்டோ க்விஸ்.

லீடர்மணி கதையுலகில் சிகரமாக அமைந்துள்ளது.

பாரசீக ரோஜாவின் படங்கள் பலே! பலே! கதை விறுவிறுப்பாக இருக்கிறது.

'ஆவி எழுதியது' அதி அற்புதமாக அமைந்துள்ளது.

'வெள்ளிமூக்கு' நகைச்சுவை ததும்புகிறது.

கவியரங்கத்தில் மாணவர்களின் புலமைத் திறத்தைத் தெவிட்டாத நடையில் கண்டு களிக்கலாம்.

சைக்கிள் பரிசு தித்திக்கும் தேன் போலுள்ளது.

'கேளுங்கள் சொல்கிறேன்' அழகு தமிழில் அறிவைப் பெருக்கும் பகுதி.

சந்திரகிரிக் கோட்டை பாராட்டும் வகையில் சிகரத்தின் உச்சியை எட்டிப் பிடிக்கிறது.

ஜோஸ்யர் நரியார் சுவாரஸ்யமான கதை.

சோதிடரும் திருடனும், பெயர் பொருத்தம், வயிற்றுப் பானை இவைகள் வயிறு குலுங்க நகைப்பூட்டும் ஹாஸ்யங்கள்.

பொங்கல் பற்றிய கட்டுரை மிக மிக நன்ருக உள்ளது. எங்கள் பகுதி பரவாயில்லை. விமரிசனம் நீதியைப் புகட்டுகிறது. கண்ணன் பண் பலே ஜோர்! மற்றவைகள் சுமார். செய்திகள் சிறப்பாக உள்ளன. பொங்கல் நன்னளில், புனிதத் திருநாளில், கண்ணன் வந்தான், களிப்பூட்டிஞன்.

குரு. சண்முகம், தேவகோட்டை.

சிறப்பு

'கண்ணனை' விரும்பி ஆர்வத்துடன் படிக்கும் நேயர்களில் நானும் ஒருத்தி. ஒவ்வோர் இதழிலும் முதல் முதலில் நான் படிக்க விரும்புவது 'எங்கள் பகுதி'தான். நம் தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்கு இவ்வளவு எழுத்துத் திறமை உள்ளதா என்று நான் வியப்புறுகிறேன்; பெருமையும் கொள்கிறேன். ஒவ்வொரு முறையும் எங்கள் பகுதியையும், கண்ணனின் மற்றக் கதைகள் கட்டுரைகளையும் படிக்கும்போது நாமும் ஏன் சிறுமியாக மாறிவிடக் கூடாது என்று தோன்றுகிறது.

குழந்தைகளிடம் ஒளிந்திருக்கும் எழுத்தாற்றலை வெளிப்படுத்தி அதனை மற்றவரும் படித்து இன்புற உதவுகிறது 'கண்ணன்'. அறிவு வளர்ச்சிக்கும், கற்பனைத் திறத்தை வளரச் செய்வதற்கும் சிறந்த சேவை செய்கிறது. தொடர்கதைகள் ஒவ்வொன்றும் மிகச் சிறந்த முறையில் எழுதப்பட்டு எல்லோரையும் விரும்பிப் படிக்கத் தூண்டுகிறது.

குழந்தை உலகிற்கு மட்டுமின்றி பெரியோர்களுக்கும் 'கண்ணன்' மகிழ்ச்சியை ஊட்டுகிறது.

ஆர். லலிதா, ஆசிரியை,
பாலக்கோடு.

---

* ரூ. 5 பரிசுபெற்ற கடிதம்

புதிர்க் கேள்விகள்

1. வாய் திறந்து பேசாமலேயே விஷயங்களைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் யார்?
2. கடன் வாங்காமலேயே அடிக்கடித் திருப்பிக் கொடுப்பது எது?
3. மலையின் மேலே செல்லும்; கீழே இறங்கும்; ஆனால் இருந்த இடத்தைவிட்டு அசையாது.
4. அங்கும் இங்கும் எங்கே பார்த்தாலும் வெயிலில் கூட அவர் ஓடித் திரிவார். ஆனால் நிழலைக் காண முடியாது.
5. அசுத்தமாக இருக்கும்போது வெளுப்பாக இருக்கும். சுத்தம் செய்தால்கறுப்பாகிவிடும்; எது?
6. பேச ஆரம்பித்ததுமே தொலைந்துவிடுகிறது எது?

7. தலையை எடுத்த உடனேயே மேலே உயரக் கூடியது எது?
8. தண்ணீரில் விழுந்தாலும் நனையாமல் இருப்பது எது?

புதிர்க் கேள்விகள்: விடை

1. புத்தக ஆசிரியர்; 2. நன்றி; 3. மலைப்பாதை; 4. வாயு பகவான்; 5. கரும்பலகை; 6. அமைதி; 7. தலையணை; 8. சூரிய ஒளி.

என். ராமகிருஷ்ணா

போட்டோ



(1) சிற்பத்தில் சிறந்த இந்தக் கோயில் எந்த ஊரிலுள்ளது?

1. சிதம்பரம்
2. தஞ்சாவூர்
3. மாயூரம்

(2) என்ன மரம்?

1. கமுகு
2. பப்பாளி
3. கூந்தல் பனை



(3) இந்த வாத்தியத்தின் பெயர் என்ன?

1. டோலக்
2. டோல்
3. மிருதங்கம்

(4) எந்த ஊர் மலைக் கோயில்?

1. திருக்கழுக் குன்றம்
2. திருத்தணி
3. திருப்போரூர்

க்விஸ்

(5) இலையா, பூவா, காயா?

1. பரங்கி இலை
2. பூசணிப் பூ
3. முட்டைக் கோஸ்





(6) பிரசித்தி பெற்ற இந்தக் கட்டிடம் எது?

1. மதுரை திருமலை நாயக்கன் மஹல்
2. தஞ்சை கலைக் கூடம்
3. மைசூர் ஜகன் மோகன் பாலஸ்

(7) என்ன மிருகம்?

1. நீர்யானை
2. காண்டாமிருகம்
3. நீர்க் குதிரை



(8) எந்த ஊர் நீர்த் தேக்கம்?

1. மேட்டூர் அணை
2. கிருஷ்ணராஜ சாகர்
3. மைசூர் வாணி விலாஸ் தேக்கம்.

சந்திரகிரிக் கோட்டை

'ஜனு'

அந்தப் பட்டுச் சுருளுக்குள் அப்படி என்ன செய்தி அடங்கிருக்கும்? பாளையக்காரரின் கோபத்தை எழுப்பக் கூடிய ரகசியம் என்னவாக இருக்கும்?

பாளையக்காரருக்கு இந்த மாதிரி கோபம் வந்து இது வரையில் யாரும் பார்த்ததேயில்லை. அருளேந்தியிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் அவர் கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்துவிட்டன. எதிரே நின்ற தூதனுக்குக் கதி கலங்கிப் போய்விட்டது.

அவர் மிகுந்த பிரயாசைப் பட்டுத் தம் கோபத்தை அடக்கிக் கொண்டார். ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டு மேலே என்ன செய்வது என்று சிந்தனையில் ஆழ்ந்தார். மறுபடியும் கண்களைத் திறந்து அந்தக் கடிதச் சுருளைப் பிரித்து நிதானமாகப் படிக்கலானார்:

''ராஜ விசுவாசத்தில் தலை சிறந்து விளங்கும் பெரியகோட்டைப் பாளையக்காரர் மன்றூடியார் அவர்களுக்கு, அமைச்சர் அருளேந்தி எழுதியனுப்பும் அவசர ஏடு. நேற்று இரவு இங்கே அரண்மனையில் ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம் நிகழ்ந்துவிட்டது. ராஜகுமாரி இந்துமதிக்கு நேர்ந்த கதியைத்தான் சொல்கிறேன். இரவு தன் சயன அறைக்குச் சென்ற அரச குமாரியைக் காணவில்லை. யாரோ அந்நியர் இருவர் அரண்மமனைக்குள் கள்ளத்தனமாக நுழைந்து அவளைக் கவர்ந்து சென்றிருக்கிறார்கள். நமது பொது எதிரியான கங்கராஜனின் சதியாக இருக்கும்

என்று நான் சந்தேகப்படுகிறேன். அதற்கான தடயங்கள் சில இருக்கின்றன. இந்த உண்மை வெளிப்பட்டால் அது நமது ராஜ வம்சத்துக்கே ஒரு களங்கத்தை உண்டாக்கிவிடும். எனவே இது ராஜாங்க ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. அரசகுமாரியின் அந்தரங்கமான சேடிகள் இருவரைத் தவிர வேறு யாருக்கும் இந்தச் செய்தி அறிவிக்கப்படவில்லை. தங்களுக்கும் மற்ற இரண்டு பாளையக்காரர்களுக்கும் மட்டுமே இப்போது தெரியப்படுத்தியிருக்கிறேன். இந்தச் செய்தி அங்கே இப்போது தங்கியிருக்கும் இரட்டையர்களுக்குக்கூடத் தெரிவது உசிதமல்ல. ராஜகுமாரியை உடனே மீட்டு அரண்மனைக்குக் கொண்டுவரும் வரையில் அவர்களை இங்கே அனுப்பாமல் வைத்திருக்க முடியுமானால் நல்லதுதான். ஆனால் ராஜகுமாரியை மீட்பதற்கே ஒரு பெரும் போர் நிகழும் போலிருந்தால் நிலைமை சங்கடமாக இருக்கும். இதுபற்றிக் கலந்து பேசவே தங்களை உடனே வந்து போகுமாறு கேட்டுக்கொள்கிறேன். ராஜகுமாரர்கள் இருவரும் அறியாதபடி வருவதே சிறந்தது. அங்குள்ள நிலைமைக்குத் தகுந்தபடி நடந்து கொள்வதுடன், உதயத்துக்குள் சந்திரகிரிக்கு வந்து சேர வேண்டுமாய்க் கோருகிறேன்.''

இதுதான் அந்தச் சுருளில் இருந்த செய்தி. ராஜகுமாரியை யாரோ அபகரித்துச் சென்றுவிட்டார்கள் என்ற செய்தியே பாளையக்காரருக்குத் தாங்க முடியாத ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது. தம் குமாரிக்கு இத்தகைய ஆபத்து வந்திருந்தால் கூட அவர் இவ்வளவு பதட்டம் கொண்டிருக்க மாட்டார். சந்திரவர்ம ராஜனின் குமாரி என்றதுமே அவர் ரத்தமே கொதிக்கத் தொடங்கி விட்டது. ஆயினும் தூதுவனுக்கு எதிரே நிதானத்தை இழக்கலாமா?

அவர் தம் முக விலாசத்தை மாற்றிக் கொண்டு, ''சரி: நீ போய் ஒற்றர் விடுதியில் தங்கியிரு. அங்கே உனக்கு விரைவில் உத்தரவு கிடைக்கும்!'' என்று அவனை அனுப்

பிவிட்டு, அவர் மேலே செய்ய வேண்டியதைப் பற்றித் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்.

பொழுது புலர்ந்தது. இரவில் அந்தப் பெரிய கோட்டையில் எதுவுமே நிகழாததுபோலத் தான் இருந்தது. ஆயினும் பல காரியங்கள் நிகழ்ந்திருந்தன என்பது சம்பந்தப்பட்டவர்களைத் தவிர வேறு யாருக்குமே தெரியாமலிருந்தது, இரவோடு இரவாகப் பெரிய கோட்டையின் வீரர்கள் எல்லாம் யுத்த சன்னத்தமாகி விட்டார்கள். கோட்டை கொத்தளங்கள் எங்கும் இரவில் சுறு சுறுப்பாக இருந்தது. அந்தக் குறு நாட்டின் நாலாதிசைகளிலிருந்தும் குதிரை வீரர்கள் வந்து குவிந்து விட்டார்கள். அவர்களுக்கு என்ன காரணத்துக்காக வந்திருக்கிறோம் என்பது ஒன்றும் தெரியாது. படைத் தலைவர்களிடமிருந்து எந்தச் சமயத்தில் என்ன கட்டளை பிறக்குமோ என்று ஆயத்தமாகப் பாசறைகளில் பதுங்கியிருந்தார்கள். பாளையக்காரரின் மாளிகையிலே கட்டுக் காவல்கள் எல்லாம் கெடுபிடியாக இருந்தன. இரண்டு இரண்டு குதிரை வீரர்கள் கையில் பிடித்த ஈட்டிகள் பளிச்சிட எச்சரிக்கையாகக் காவல் நின்றார்கள். இதெல்லாம் பரபரப்பின்றி சர்வ சாதாரணமாக அன்றாடம் நிகழ்வன போலவே இருந்தன. ஒருவரும் அந்த மாளிகையினுள்ளே செல்ல அனுமதிக்கப் படவில்லை. பாளையக்காரருக்குப் பணிவிடைகள் புரியும் சேடியர்கள்கூட மாளிகையின் ஒரு பகுதிக்குள் அனுமதிக்கப்படாமல் திருப்பியனுப்பப் பட்டார்கள். சேனைத் தளபதி அந்த வாசலில் அமர்ந்து உத்தரவுகள் போட்டு வந்தார்.

காலையில் அமலன் விழித்தெழச் சிறிது நேரமாயிற்று. உடனே ஒரு பணியாள் அவனிடம் ஓடிவந்து முழந்தாள் இட்டுப் பணிந்து, ''பாளையக்காரர் அவசரமான, அந்தரங்கமான அரசாங்க அலுவலில் இருக்கிறார். அவர் தங்களை அழைக்கும் வரையில் தாங்கள் இங்கேயே ஓய்வு பெற்றுக்கொள்ளலாம். தங்களுக்கு ஆவன செய்து தர இங்கே எனக்குக் கட்டளையிடலாம். காத்திருக்கிறேன்'' என்றான்.

அமலனுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. பிறகு கம்பீரமாகத் திரும்பி, ''அப்படியென்றால் இதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டான், அந்தப் பணியாள் பதில் ஒன்றும் சொல்லாமல் போகவே, ''பாளையக்காரர் அழைக்கும் வரையில் சிறை வாசமா?'' என்றான்.

அந்தப் பணியாள் உடனே தலை வணங்கி, ''அப்படியல்ல; நான் சொல்ல வந்தது வேறு; பாளையக்காரர் வேறு அலுவலாக இருக்கிறார் என்பதையே நான் குறிப்பிட்டேன். தாங்கள் ஒரு சமயம் அவரை இப்போது பார்க்க விரும்பினால் அதற்கு இது ஏற்ற சமயமல்ல என்பதைத் தவிர தாங்கள் எங்கே வேண்டுமானாலும் சென்று வரத் தடையேயில்லை'' என்றான்.

''அப்படியானால் உங்கள் பாளையக்காரர் விரும்புகிற வரையில் நாங்கள் சந்திரகிரிக்குப் புறப்படக் கூடாது போலிருக்கிறது! அது தானே?'' என்றான் அமலன்.

அந்தப் பணியாள் அதற்கு விடை எதுவும் சொல்லாமல் தலை வணங்கி நின்றுகொண் டிருந்தான்.

''சரி; நீ போகலாம். நான் வேண்டும்போது உன்னை அழைப்பேன்!'' என்று சொல்லிவிட்டு, அமலன் ஸ்நானத்துக்குப் புறப்பட்டான்.

அதே சமயத்தில் கிட்டத்தட்ட இதே போன்ற சம்பாஷணை தான் விமலனுக்கும் வேறு ஒரு பணியாளுக்கும் நடைபெற்றது. ஆனால் விமலனுடைய பேச்சு இன்னும் சிறிது கடுமையாக இருந்தது. இரவெல்லாம் அன்ன ஆகாரமின்றி, சரியான துயிலும் இன்றி இருந்த விமலனுடைய பேச்சில் கடுமை தொனித்தது.

''யாரடா நீ? எவனடா எனக்கு இதைச் சொல்லியனுப்பியது?'' என்று ஓர் அதட்டல் போட்டான்.

அந்தப் பணியாளுக்கு வெலவெலத்து விட்டது. ''பிரபுவே..

இந்த அடிமை'' என்று நாக் குழற ஏதோ கூறவந்தான்.

''சட்.. போதும் .. நிறுத்து!'' என்றான் விமலன்.

அந்தப் பணியாள் வாயைப் பொத்திக்கொண்டு விட்டான். ஆனால் கலகலவென்று யாரோ குலுங்கச் சிரிப்பது கேட்டு இருவருமே திரும்பிப் பார்த்தார்கள். கள்ளங் கபடற்ற முகத்துடன் அங்கே குந்தவிதான் நின்றுகொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதுமே விமலன் தன் கோபத்தை விழுங்கிவிட்டான், குந்தவியோ அந்தப் பணியாளைப் பார்த்து, ''யாரடா அது! நீ போ, ராஜகுமாரருக்கு வேண்டியதை நான் கவனிக்கச் சொல்கிறேன்!'' என்றாள்.

அவனுக்குத் தன்னை விட்டுவிட்டால் போதும்போ லிருந்ததால் உடனேயே ஓடிவிட்டான். குந்தவி ஒரு முறை வாசல் புறத்தை நோக்கிக் கை வளைகள் குலுங்கத் தட்டினாள். அடுத்த கணம் இரண்டு மூன்று சேடியர்கள் கையில் தங்கத் தட்டுகள் ஏந்தியவாறு உள்ளே நுழைந்து வந்தார்கள். விமலன் பதுமையைப் போல் குந்தவியையும் மற்றவர்களையும் கவனித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.

ஒருத்தி தங்கக் கிண்ணத்திலே பன்னீர் எடுத்து வந்து விமலன் முன்னே வைத்தாள். ஒருத்தி தாம்பாளத்தை அவன் காலருகே வைத்தாள். விமலன் தன் முகத்தைப் பன்னீரால் கழுவிக்கொண்டான். அங்கே யிருந்த நிலையில் எதையும் மறுத்துச் சொல்லவே அவனால் முடியவில்லை. சுற்றி நிற்பவர்கள் எல்லாரும் பணிப் பெண்கள். அவர்களை யெல்லாம் கடுமையாக நடத்துவது முறையுமல்ல; விமலன் போன்ற வீரர்களுக்கு அது அழகுமல்ல. எனவே அவர்கள் செய்த உபசரிப்புகளை யெல்லாம் குழந்தைபோல ஏற்றுக் கொண்டான். அறுசுவை உண்டியையும் அருந்தினான். அதுவரையில் குந்தவி அவனிடம் பேச்சுக் கொடுக்கவேயில்லை.

''குந்தவி, கடைசியில் நீதான் ஜயித்தாய்?'' என்றான் விமலன்.

''நீங்கள் அல்லவா நேற்றுப் போட்டியில் வெற்றி பெற்றீர்கள்? நான் போட்டிக்கே போகவில்லையே!'' என்றாள் குந்தவி.

''இதோ பார் குந்தவி, நேற்றைப் போட்டியைப் பற்றி இனி என்னிடம் பேசாதே. அதை ஒரு போட்டியாகவே நான் மதிக்கவில்லை. நீ மட்டும் இதற்குப் பொறுப்பாக இருந்திராவிட்டால் நடப்பதே வேறாக இருக்கும்!''

''இல்லை. நீங்கள் சொல்வது தவறு. நேற்றைப் போட்டியில் உங்களைத் தவிர வேறு யாராலும் ஜயம் பெற்றிருக்க முடியாது. இதற்காக நீங்கள் மனம் வருந்துவ



21795
சென்னை-600 008

தில் அர்த்தமில்லை'' என்றான் குந்தவி.

''சரி; வேறு பேச்சு இருந்தால் பேசு. இல்லாவிட்டால் எழுந்து போகலாம்'' என்று முகத்தை முறிப்பதுபோல் சொன்னான் விமலன்.

''நான் வேறு பேச்சுத்தான் பேச வந்திருக்கிறேன். ஆனால் அது இதைவிட உங்களுக்குக் கசப்பாக இருக்குமே என்றுதான் அஞ்சுகிறேன்'' என்றாள் குந்தவி.

''அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். சொல்ல வந்ததைத் தாராளமாகச் சொல்லலாம்.''

''நமது அரசகுமாரி இந்துமதி, இளவரசன் அமலனையே மணந்து கொள்ள விரும்புகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது உங்களுக்கு எப்படி இருக்கும்?'' என்றாள் குந்தவி. அவள் முகத்திலே குறும்புச் சிரிப்பு ஒன்று நெளிந்து சென்றது.

''என்னது, என்னது? மறுபடியும் தெளிவாகச் சொல்?'' என்றான் விமலன்.

''உங்களுக்கு நான் சொன்னது கேட்க வில்லையா, கேட்கப் பிடிக்க வில்லையா?'' என்றாள் குந்தவி.

''இரண்டுந்தான்.''

''அது போகட்டும்; உங்களுக்கு மட்டும் ஒரு ரகசியம் சொல்லி வைக்கிறேன், உங்களுக்கு உயிர் மீது ஆசை யிருந்தால் இந்துமதியை மறந்து விடுங்கள்.''

''இதைக் கேட்டதும் விமலன் துள்ளி எழுந்து, ''குந்தவி! இது என்ன உளறல்?'' என்று கர்ஜனை செய்தான்.

''உட்காருங்கள் இளவரசே! நான் உண்மையைத்தான் சொல்கிறேன். இளவரசி இந்துமதி சந்திரகிரியிலிருந்து தப்பிச் சென்றுவிட்டாள். இந்த விஷயம் இதுவரையில் இங்கே யாருக்கும் தெரியாது!''

''ஆ. . என்ன?'' என்று கேட்கும் போதே விமலனின் உடல் பதறியது. கை இடை வாளை நோக்கிச் சென்றது.

''ஆமாம், இளவரசே! என் தந்தைக்குக்கூட தெரியாது. சந்திரகிரி அரண்மனையை விட்டு இளவரசி இந்துமதி எங்கோ போய் விட்டாள். . .''

''ஆனால் உனக்கு மட்டும் இது எப்படித் தெரியும்?''

''எப்படியோ தெரியும். அதையெல்லாம் இவ்வளவு சீக்கிரம் சொல்ல முடியுமா?''

''சரி; வேறு யாருக்கும் இது தெரியாது என்பது உண்மை தானா?''

''உண்மைதான்.''

''அதாவது என் அண்ணனுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்?''

''அவரைத்தான் சொல்கிறேன் நானும். தெரியாது.''

அடுத்த கணம் விமலன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே வந்தான்.

''யாரடா இங்கே! ஓடிப் போய் என் நீலவேணியைப் பிடித்து வா! சரி, வேண்டாம்; நானே போகிறேன்'' என்று சொல்லிவிட்டு முற்றத்துக்குப் பாய்ந்து சென்றான்.

குந்தவி மட்டும் பின்னாலேயே ஓடிவந்து, ''இளவரசே, இன்னும் ஒரு விஷயம்! இன்னும் ஒரே ஒரு விஷயம்!'' என்று கூவிக்கொண்டே தாழ்வாரம் வரையில் வந்து நின்றாள்.

விமலன் அதற்குள் நீலவேணியின் மேல் ஏறிக்கொண்டு விட்டான். குந்தவியின் குரலைக் கேட்டும் கேளாதவன் போல அவன் போயே போய் விட்டான்.

(தொடரும்)

க்விஸ் விடை:

1. தஞ்சாவூர். சுப்பிரமணியர் ஆலயம்.
2. பப்பாளி
3. மிருதங்கம்
4. திருக்கழுக்குன்றம்
5. முட்டைக் கோஸ்
6. கலைக் கூடம்
7. நீர்யானை
8. வாணிவிலாஸ் தேக்கம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.